5-3-1990
5-3-1990

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# சிந்தாமணி

ரூ 5/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA — CHINTHAMANI

இல 1053 | 4—3—1990 | சுக்கில மாசி 20 உ | 1990 மார்ச் 4 ஞாயிற்றுக்கிழமை | ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 6



## கந்தருவ சுந்தரியோ!

அழகென்ப திவளிடத்தில் அழகு கற்ற தோ?
அமைதியென்ப திவள்முகத்தில் அமர்வு கொண்ட தோ?
விழியென்ப திவளிடமதான் விரகம் கற்ற தோ?

### வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைப்பு:

# அரசு நடவடிக்கை பற்றி ஆலோசனை

## சட்டப் பிரச்சினைகள் அலசி ஆராயப்படுகின்றன

கொழும்பு, மார்ச் 3

வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைப்பதா? அல்லது பொறுப்பேற்பதா? இவையற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. சட்ட வல்லுநர்களுடனும் ஆராய்ந்து வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாளின் தனி ஈழம் தீர்மானத்தை அடுத்து அரச உயர் மட்டத்தில் மாகாண சபை சட்டதிட்டங்கள் பற்றி இப்போது அலசி ஆராயப்பட்டு வருகிறது—

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்ன தனி ஈழத் தீர்மானம் பற்றிய முழு விவரங்களையும் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவிடம சமர்ப்பித்திருக்கிறார்—

இதனையடுத்தே மாகாண சபையை கலைப்பதில் உள்ள சிக்கல்களை சட்ட வல்லுநர்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியிருக்கின்றனர் என்று "சிந்தா மணிக்"குத் தெரிவித்தன—

13ஆவது அரசமைப்புத் திருத்தங்களின் 154 B & C சரத்தின் படி மாகாண சபையை கலைக்கும அதிகாரம ஆளுநருக்கே உண்டு.

ஆயினும மாகாண அமைச்சரவைக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு இருக்கிறது என்று ஆளுநர் கருதினால் அவர் மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே சபையைக் கலைக்க வேண்டும என்று அடுத்த சரத்து "C" கூறுகிறது—

முதலமைச்சர் ஆலோசனை கூறினால் ஒழிய ஆளுநர் சபையைக் கலைக்க முடியாது—

சேவைகள் பாதிக்கப்படுகின்றன என்று கண்டால் —

அல்லது மாகாண சபை நிர்வாகத்தை அரசமைப்புக்கு அமைவாக நடத்த மாகாண சபையால் முடியவில்லை என்று

(2 ஆம பக்கம பார்க்க)

### நோயாளர் புகார் பதிய புத்தகம்

கொழும்பு மார்ச் 3

சகல அரச ஆஸ்பத்திரிகளின் வார்ட்டுகளிலும நோயாளர்களின் முறைப்பாடுகளையும பாராட்டுகளையும பதிவதற்கு என குறிப்புப் புத்தகங்களை வைக்க வேண்டும.

அரச சேவைகள் ஐக்கிய தாதிமார் சங்கம சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்திடம் இவ்வாறு

(2 ஆம பக்கம பார்க்க)

### 2¼லட்சம் பேருக்கு எயிட்ஸ் நோய்

உலகில் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 22 ஆயிரத்து 740 ஆக அதிகரித்திருக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதம வரை உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்ட புள்ளி விவரம இதுவாகும.

இத்தகவலை உலக சுகாதார ஸ்தாபனம கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டிருக்கிறது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் மட்டும எயிட்ஸ் நோயினால் பிடிக்குப்பட்டவர்களின் எண்ணிக்கை 7,596 ஆல் அதிகரித்திருக்கிறது;

153 நாடுகளில் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இவை. அமெரிக்காவில் இந்த எண்ணிக்கை 3,864 ஆல் அதிகரித்து 1,21,645 ஆகியிருக்கிறது.

(ண)

### ரூ. 20 கோடி பெறுமதி ஆடைகள் களஞ்சிய சாலைகளில் தேக்கம்

20 கோடி ரூபா பெறுமதியான தைத்த ஆடைகள் ஏற்றுமதி ஒப்பந்தப்படி குறித்த காலத்தில் இந்த ஆடைகளை ஏற்றுமதி செய்ய பெருமளவிலான ஏற்றுமதி ஓடர்கள் கிடைக்காமற் போகலாம.

அமைதியென்ப திவள்முகத்தில் அமர்வு கொண்ட தோ?
விழியென்ப திவளிடமதான் விரகம கற்ற தோ?
வீரனையும வீழ்த்துகின்ற வேகம பெற்ற தோ?
மொழியென்ப திவளிடமதான் மோகனை கற்ற தோ?
மோகம என்னும லாகிரியும வீறுபெற்ற தோ?
கழல்களிலே நூ புரமும தாளம கற்ற தோ?
கந்தருவ சுந்தரியின் காந்தம என்ன வோ?

இதனையடுத்தே மாகாண சபையை கலைப்பதில் உள்ள சிக்கல்களை சட்ட வல்லுநர்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறி இருக்கின்றனர் என்று தெரியவருகிறது—

பிரச்சினை எவ்வாறு இருந்த போதிலும் வடக்கு கிழக்கு மாகாண சபை பற்றிய முடிவை ஜனாதிபதி எந்த நேரத்திலும வெளியிடுவார் என அரசாங்க உயர் வட்டாரங்கள் "சிந்தா

அடுத்த சரத்து "C" கூறுகிறது— முதலமைச்சர் ஆலோசனை கூறினால் ஒழிய ஆளுநர் சபையைக் கலைக்க முடியாது— அப்படிக் கலைப்பது அரசமைப்புக்கு முரணானதாகும—

அடுத்தது 154 "J" 154 "K" 154 'L" சரத்துகளின் கீழ் யுத்தம வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதக் கிளர்ச்சி காரணமாக அத்தியாவசிய

20 கோடி ரூபா பெறுமதியான தைத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படாமல் களஞ்சியங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட குழப்ப நிலைமைகளே இதற்குக் காரணம.

ஒப்பந்தப்படி குறித்த காலத்தில் இந்த ஆடைகளை ஏற்றுமதி செய்ய இயலாமற் போய் விட்டது,

இதனால் தான் இவ்வாறு நஷ்டம ஏற்பட்டிருக்கிறது,

எதிர்வரும காலங்களில் இது போன்ற பெருமளவிலான ஏற்றுமதி ஓடர்கள் கிடைக்காமற் போகலாம,

இவ்வாறு இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்களின் சங்கச் செயலாளர் திரு பெட்ரிக் அமரசிங்கா கூறினார்.

(ண—007)

## குமரன் கொலனியில் 2 தீவிரவாதிகள் கைது

கொழும்பு மார்ச் 3

நுவரெலியாவில் பாதுகாப்புப் படையினர் குமரன் கொலனியில் நடத்திய தேடுதலில் இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்,

இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் சுப்பிரமணியம என்பவரிடம இருந்து 11,97,700 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களையும, மின்சாரப் பொருட்களையு கொள்ளை அடித்தனர்.

லக்கிலேண்ட் பிஸ்கட் கமபனியின் வானில் இருந்து 8389 ரூபா ரொக்கப் பணமும, 12,777 ரூபா பெறுமதியான காசோலைகளும கொள்ளை அடிக்கப்பட்டன,

அரசாங்க அறிவித்தலில் இவை பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது—

(ண—007)

# மலையக பாடசாலை ஆசிரியர் 995 பேர் நியமனம் பெறுவர்

கொழும்பு மார்ச் 3

மலையகப் பாடசாலை ஆசிரியர் திட்டத்தின் கீழ் 995 ஆசிரியர்கள் நியமனங்களைப் பெறுவர்—

இவர்கள் இம்மாதம் 15 ஆம திகதி அந்தப் பகுதி கல்விப் பிரதேசத்தில் இருக்கும் பயிற்சி நிலையங்களுக்குச் செல்லுமாறு கல்விச் சேவை ஆணைக்குழு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது—

நுவரெலியா பதுளை கண்டி களுத்துறை ஹோமாகமை காலி குருநாகல் மாத்தறை இரத்தினபுரி கேகாலை மாத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோர் இந்த ஆசிரியர் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்—

தொண்டர் ஆசிரியர்கள் உட்பட பெருமபாலான விண்ணப்பதாரர்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படவில்லை என கூறப்படுகிறது—

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படாத தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும—

நாடளாவிய ரீதியில் சுமார் 6 ஆயிரம தொண்டர் ஆசிரியர்கள் இருப்பதாக கல்வி அமைச்சுக்குத் தெரியவந்துள்ளது—

இவர்கள் அனைவருக்கும புதிய திட்டத்தின் கீழ் நியமனம் வழங்கப்படுமென அமைச்சு தீர்மானித்திருக்கிறது—

இதற்கென புதிதாக விண்ணப்

(2 ஆம பக்கம பார்க்க)

# கண்டியிலிருந்து பாத யாத்திரை

கண்டி மார்ச் 3

... நாட்டின் சமாதானம, ஐக்கியம ஒருமைப்பாடு ஆகியவற்றுக்காக நேற்றுக் காலை கண்டியில் இருந்து சிவனொளி பாத மலைக்கு சமாதான யாத்திரை ஒன்று புறப்பட்டது— தலதா மாளிகைக்கு முன் இடமபெற்ற இது தொடர்பான வைபவத்தில் பௌத்த, இந்து இஸ்லாமிய மதகுருமார்கள் கலந்து கொண்டனர்—

சர்வோதய தலைவர் கலாநிதி ஏ ரீ ஆரியரத்ன, கண்டி மேயர் திருமதி சந்திரா ரணராஜா

(2 ஆம பக்கம பார்க்க)

# சட்டவிரோத ஆயுதங்கள் இருந்தால் நடவடிக்கை

கொழும்பு மார்ச் 3

சட்ட விரோதமாக ஆயுதங்களையும, வெடி மருந்துகளையும வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும.

இப்படி பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் எச்சரித்திருக்கிறது, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

மார்ச் மாதம 1ஆம திகதிக்குள் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும கையளிக்காதவர்கள், அவற்றுடன் கைது செய்யப்படுவார்கள், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும.

லைசென்ஸ் இல்லாமல் தற்காலிக அனுமதிப்பத்திரங்களுடனும அதிகாரபூர்வமான கடிதங்களுடனும், ஆயுதங்களை

(2 ஆம பக்கம பார்க்க)

# சந்தேகத்திற்கு இடமான படையினர் மீது விசாரணை

கொழும்பு மார்ச் 3

கொள்ளைச் சமபவங்களில் சமபந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும நூற்றுக்கும மேற்பட்ட ஆயுதப் படையினர் மீது முழு விசாரணை நடக்கும—

இதற்கான உத்தரவை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும வெளிவிவகார அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன பிறப்பித்திருக்கிறார்—

அவர் இரகசியப் பொலீஸாருக்கும பொலீஸாருக்கும இராணுவப் பொலீஸாருக்குமே இப்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்—

இராணுவ சீருடையிலும சிவில் உடையிலும ஆயுதபாணிகளாகச் சென்று கொள்ளைச் சமபவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும ஆயுதப் படையினர் தொடர்பாகவே முழு அளவு விசாரணை நடைபெறும—

அமைச்சர் திரு விஜேரத்ன இதுபற்றித் தெரிவித்திருப்பதாவது—

பல்வேறு கொள்ளைச் சம

(2 ஆம பக்கம பார்க்க)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

காலி மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகம பார்க்கும 28 வயதுள்ள முஸ்லிம பெண்ணுக்கு அரசாங்க உத்தியோகம பார்க்கும மணமகன் தேவை- சீதனம 30 ஆயிரம, நகை, வீட்டில் அரைவாசி கொடுக்கப்படும- முழு விபரங்களையும முதல் கடிதத்திலேயே அறிவிக்கவும- விளமபரதாரர் இலக்கம- மா-04-05 மே/பா சிந்தாமணி- த பெ 1257, கொழுமபு-

நுவரஎலிய மாவட்டத்தைச் சேர்ந்த 25 வயதுடைய படித்த, முஸ்லிம மணமகளுக்கு நிரந்தரமான தொழில் புரியும மதப்பற்றுள்ள மணமகன் தேவை- வீடு கட்டி நிலம, நகை, சீதனமாகக் கொடுக்கப்படும- எப்பகுதியினரும விண்ணப்பிக்கலாம- விளமபரதாரர் இலக்கம- மா-04-01 மே/பா சிந்தாமணி த பெ 1257 கொழுமபு-

கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட தாய், தந்தையரை இழந்த 30 வயதுடைய முஸ்லிம மணமகளுக்கு மதப்பற்றுள்ள, நிரந்தரத் தொழில் புரியும மணமகன் தேவை- இலங்கையில் எப்பகுதியினரும விவாகரத்துப் பெற்றவர்களும விண்ணப்பிக்கலாம- விளமபரதாரர் இலக்கம- மா-04-02 மே/பா சிந்தாமணி, த பெ 1257 கொழுமபு-

கொழுமபு 12 ச் சேர்ந்த 22 வயதுடைய பொது நிறமுள்ள முஸ்லிம மணமகளுக்கு அவரது தகப்பன் சொந்த தொழில் அல்லது அரசாங்க உத்தியோகம புரியும 28 வயதுக்குட்பட்ட மணமகனை எதிர்பார்க்கின்றார்- கொழுமபுப் பகுதியிலுள்ளவர்கள் விருமபத்தக்கது- பணம, நகை கொடுக்கப்படும- முதற் கடிதத்தில் முழு விபரத்தையும அறியத் தரவும- விளமபரதாரர் இலக்கம- மா-04-03 மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழுமபு-

## வாகன ட்ரைவிங் பயிற்சி

## மணமகள் தேவை

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவமான முஸ்லிம பெற்றோர் படித்த, சொந்த வியாபாரம புரிகின்ற, நல்லொழுக்கமுள்ள தங்களது முப்பது வயது மகனுக்கு பொருத்தமான மணமகளை சீதனத்துடன் தேடுகின்றனர்- முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும- விளமபரதாரர் இலக்கம- மா-04-08. மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழுமபு-

கொழுமபில் உத்தியோகத் துறையிலான வியாபார ஸ்தாபனத்திற்கு உரிமையாளரும விஸ்வகுல, இந்து மதத்தைச் சேர்ந்தவருக்கு கல்வியறிவுடைய, அழகிய, ஆங்கிலம தெரிந்த தொழிலையும பராமரித்துக் கொள்ளக் கூடிய தகுதியுடைய வயது 28 க்கும 35 க்குமிடைப்பட்ட பொறுப்புகளற்ற பெண்ணொருவர் துணைவியாகத் தேவை. விதவை, விவாகரத்துப் பெற்ற பொறுப்புகளற்றவர்களும விண்ணப்பிக்கலாம- விளமபரதாரர் இலக்கம- மா-04-07, மே/பா சிந்தாமணி, த பெ 1257. கொழுமபு-

முஸ்லிம, வயது 40, பொறுப்புள்ள பதவி வகிப்பவர்; நல்ல குணமுள்ள பெண்ணை விருமபுகிறார். விபரங்களோடு விண்ணப்பிக்கவும- விளமபரதாரர் இலக்கம- மா-04-06. மே/பா சிந்தாமணி. த பெ 1257, கொழுமபு.

முஸ்லிம சகோதரர்கள், கொழுமபில் அரசாங்க திணைக்களத்தில் உயர் பதவி வகிக்கும அழகிய நல்ல பண்புள்ள 35 வயதுடைய சகோதரருக்கு துணைவி தேடுகின்றனர்- முதல் கடிதத்தில் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும- விளமபரதாரர் இலக்கம- மா-04-04 மே/பா சிந்தாமணி, த பெ 1257 கொழுமபு-

## சேல்ஸ்மன் தேவை

## வீடு விற்பனைக்கு உண்டு

தெல்தோட்டை நகரில் ஹேறவாஹெட்டை வீதியில் ஜனாப் அமானுல்லா அவர்களின் வீடு உடன் விற்பனைக்குண்டு- கூடிய விலை மனுக்கள் கவனிக்கப்படும- தொடர்பு ஜனாப் ஏ சி எம ஷரீப் ஜே பி, தெல்தோட்டை-

வி இ 031671

## வீடு காணி விற்பனைக்கு

திஹாரிய, ஊர்மனை பள்ளிவாசலுக்கு அருகாமையில் 14 பேர்ச்சர்ஸ் காணியுடன் சகல வசதிகளும நிறைந்த வீடு விற்பனைக்கு உண்டு- தொடர்பு தொள்க- வெல்கம ரய்ஸ் மில்ஸ், தல்மல ரோட், திஹாரிய-

வி இ 1566

## வாகனம விற்பனைக்கு

எல் எச் 60 ஐ எஸ் தொமபியூடர் வான் விற்பனைக்குண்டு (ரூட் ஓடாதது) தொடர்பு கொள்ளவும- கே சுந்தர், 126, சமமியா குரேசரிஸ், புதிய நகரம திகனை. ரஜவலை-

வி இ 031676

## ஒலிபெருக்கி விற்பனை

அமபிலிபயர்கள், ஹோன், யுனிட், மைக் ஸ்ராண்ட், விற்பனைக்கு உண்டு- விலை ரூ 950/- க்கு மேல்-
Colombo Gift House 42. Key zey St. Pettah

வி இ 032632

## விற்பனைக்கு உரியவை

கல்முனை பெரிய நீலாவணை பிரதான வீதியில் அமைந்திருக்கும சகல வசதிகளும கொண்ட அரிசி ஆலை (புச்சை ரகமும, ஸ்ரீமும சேர்ந்தது) விற்பனைக்கு உண்டு- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எம வி எஸ்

## தையல் புத்தகங்கள்

1990 ஆண்டு சிறுமியர்களுக்கான புதிய கவுன் பெட்டன் புத்தகம கிட்பொல் 14 விலை (160/-) பெண்களுக்கான புதிய டீன்ஏஜ் நம 47, விலை (175/-) தபாலில் பெற விருமபுவோர் 25/- ரூபா முற்பணமாக காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளை (பணம பெறும கந்தோர் மாளிகாவத்த) அனுப்ப வேண்டும-
Aysha Book Centre 54 Supper Market, Maligawatte, Colombo 10.

வி இ 032220

## புடவை வியாபாரத் துறை

புடைவை வியாபாரத்தில் நன்கு அனுபவமுள்ளவர்களும தையல் துறையில் அனுபவம உள்ளவர்களுக்கும தொழில் வாய்ப்புண்டு- கொழுமபிற்கு அருகில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும- உடனடியாகத் தொடர்பு கொள்ளவும- கொழுமபு கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்னால், ஸ்ரீகாந்தி டிரேட் சென்டர், இல- 107, ஒல்கொட் மாவத்தை, கொழுமபு-11-

வி இ 032452

## தையல் உபகரணங்கள்

பேபி ஒலக் தையல் இயந்திரம - கத்தரிக்கோல் - ஸ்டூல்ஸ் - மற்றும தளபாடங்கள் போன்ற ஆடை தயாரிப்பு தொழிற்சாலைக்குத் தேவையான தையல் உபகரணங்கள் உள்ளன. வார நாட்களில் நேரடியாகப் பார்வையிடலாம. தொலைபேசி- 541043, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவெனியு, கொழுமபு-14.

வி இ 032090

## முதர்ரிஸ் தேவை

குர்ஆன் மதரஸா நடாத்த

## மலையக பாட...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
பங்கள் கோரப்பட்டுள்ளன- இந்த விண்ணப்பங்கள் தொடர்பான விவரங்களை பெப்ரவரி 22 ஆம திகதி வர்த்தமானியில் காணலாம என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன-

[ண—ங]

## சட்டவிரோத...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
வைத்துள்ளவர்களிடம இருந்து ஆயுதங்களையும, வெடி மருந்துகளையும, பொறுப்பேற்குமாறு பாதுகாப்புப் படையினருக்கும பொலீஸாருக்கும உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது-

(ண-007)

## கண்டியிலிருந்து...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
மத்திய பிரதேச பிரதிப் பொலீஸ்மா அதிபர் திரு ரத்னசிரி ஹேரத், தியவடன நிலமே திரு நிரஞ்சன் விஜேரத்ன கண்டி சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு லியனகே ஆகியோரும சர்வோதய சர்வதேச பணிப்பாளர் திரு ஏ ஜே செந்தில்நாதன், மத்திய மாகாண இந்து மாமன்றப் பிரமுகர் உட்பட யாழ்ப்பாணம, வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோரும இதில் கலந்து கொண்டனர்-

(ண-017).

## ஆட்சின்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
கண்டால் ஜனாதிபதி மாகாண ஆளுநர் மற்றும் நிர்வாகிகளின் கடமைகளை தாம பொறுப்பேற்கலாம-

மாகாண சபையின் அதிகாரங்களை நாடாளுமன்றத்தின் பொறுப்பில் விடலாம-

நாடாளுமன்றம் பின்னர் மாகாண சபையின் அதிகாரங்களையும நிர்வாகத்தையும ஜனாதிபதியின் பொறுப்பில் நடத்துவதற்கு வேண்டிய ஆட்களை நியமிப்பதற்கும ஜனாதிபதிக்கு அதிகாரம வழங்கலாம-

மற்றப்படி மாகாண சபைக் கலைப்புக்கோ புதிதாக தேர்தல் நடத்துவதற்கோ இடமில்லை-
இவ்வாறான சட்டப் பிரச்சினை குறித்த இப்போது தீவிரமாக ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது-

இதேவேளை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியிருப்பதால் அது ஒரு ராஜத்துரோக செயல்என்ற அடிப்படையில் மத்திய அரசு மாகாண சபையை கலைத்து அதன் உறுப்பினர்களைத் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தலாம என்றும சொல்லப்படுகிறது-

[ண—மு—007]

## சந்தேகத்திற்கு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
பவங்களில் சமபந்தப்பட்டதாகக் கூறப்படும பாதுகாப்புப் படையினர் பற்றிய பெயர்ப் பட்டியல் எனக்குக் கிடைத்திருக்கிறது-
இவர்கள் தொடர்பாக நடத்தப்படும விசாரணைகள் பற்றி நான் தீவிர அவதானத்துடன் இருக்கிறேன்-
இவ்வாறானவர்கள் சகலரும தற்போது வேலையிலிருந்தும இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்-

விசாரணை முடிவடைந்த பின்னர் இவர்கள் புரிந்த குற்றம ஒப்புவிக்கப்பட்டால் சகலரும நீதிமன்றத்தில் ஆஜர் செய்

## வைத்திய சேவைகள்

"ஆஸ்மா" (சளி, பீனிசம, இருமல், தும்மல் "எக்ஸிமா") நோயை சிறந்த மூலிகை மருந்தாலும, மனோதத்துவ ஆன்மீக விளக்கங்களுடனும, யோகாசனம பயிற்றுவித்தும முற்றாக சுகமாக்கலாம, முடி உதிர்தல், நீரிழிவு, வாதநோய்கள் நீரிழிவு குழந்தைபேறு இன்மை தளர்ச்சியான மார்பு திடர்ச்சியாக (பெண்கள்) சிறந்த மூலிகை மருந்துகள் உண்டு- ஒவ்வொரு மாதமும 10—16 ம திகதி வரை பண்டாரவளை ஸ்ரீ கல்யாணி கூப்பிலும 20—26 ம திகதி வரை திருகோணமலை பரமஜோதி மெடிக்கல் ஸ்டோரிலும சனிக்கிழமைகளில் கல்முனை டி எம எஸ் தாபனத்திலும சந்திக்கலாம- பி ஆறுமுகம் வைத்தியர் (ஆயுர்) 15/3, புகையிரத வீதி, மட்டக்களப்பு-

வி இ 0304

## யந்திரம மந்திரம

உங்களுடைய தேவைகளை என்றால் பூர்த்தி செய்து தர முடி

## நோயாளர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)
யோசனை தெரிவித்திருக்கிறது:
நோயாளர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டு இருந்தால்அது தொடர்பாகச் சங்கம தலையிடாது,
நிர்வாகத்தில் தாதிமாருக்கு அநீதி ஏற்பட்டால் அது தொடர்பாக நியாயமான விசாரணை கோரப்படும,
இவ்வாறு சங்கத் தலைவர், வண முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்,

(ண-007)

## பிறந்த நாள் வாழ்த்து



Fathima Azra

மாளிகாவத்தை ஜுமமா மஸ்ஜித் வீதி, இலக்கம 211/52/3/1 மாடி வீட்டைச் சேர்ந்த பவீனு —அகீல் தமபதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா அஸ்ரா தனது முதலாவது பிறந்த தினத்தை 01-03-90 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்-

இவரை சவூதியிலிருக்கும டடா, மமா, அமமம்மா தாத்தா, உம்மம்மா, அப்பாமார், பைசர் அங்கிள், ஆன்டிமார்களான பரீனா, பாசிலா, பாஹிமா, பஸ்மீனா, ஜெஸ்மின் ஸப்ரீனா, வெலிகம சீ வீதியைச் சேர்ந்த வாப்பம்மா, வாப்பப்பா மற்றும பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமிமார், மாமாமார், மதினிமார், மச்சான்மார், சாச்சாமார், அனைவரும அல்லாஹ்வின் அருளால் இமமையிலும, மறுமையிலும செல்வச் செழிப்பான வாழ்வு பெற பிரார்த்திக்கின்றனர்கள்-

## 30-வது நாள் நினைவஞ்சலி

04-03 மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு-

## வாகன ட்றைவிங் பயிற்சி

கார், ..ஸ் டிரைவிங் பழகுங்கள், சூரியா பாமசி, 388, காலி வீதி, வெள்ளவத்தை- கிளை- 15/21, விஜித ரோட், நெதிமாலை (ஹில் ஸ்றீட் ஊடாக) தெகிவளை- தொலைபேசி- 716853/58721-

வி இ 031856

## ஆங்கில டைப்ரைட்டர்

ஆங்கில டைப்ரைட்டர்கள் விற்பனைக்குண்டு- விலை ரூ 2900/-க்கு மேல்-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 032632

## தொழில்நுட்ப பயிற்சி

ரேடியோ, டி வி, ஹவுஸ் வயரிங் பயிற்சி வகுப்புகள், கிழமை நாட்களில், விடுமுறை நாட்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன- ரேடியோ, டி வி, டெக் இலக்றிக் உபகரணங்கள் உடன் திருத்திக் கொடுக்கப்படும்-

Gainsborough Institute 121, 1st Division Maradana Colombo 10

வி இ 031790

## கமரா பழுது பார்த்தல்

கமரா சேவிஸிங், லென்ஸ் கிளீனிங், 'பிளஷ் கண் பழுது பார்த்தல் செய்யப்படும்- கொழும்பு கிப்ட் ஹவுஸ், 42, கெய்சர் வீதி (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 032632

## சேல்ஸ்மன் தேவை

புடைவை வியாபாரத்தில் நல்ல அனுபவமுள்ள சேல்ஸ்மன் தேவை- சான்றிதழ்களுடன் நேரில் வரவும்- முஸம்மில்ஸ் ட்ரேட் சென்டர், 377 பிரதான வீதி, பாணந்துறை.

வி இ 032226

பிடவை வியாபாரம் அனுபவம் வாய்ந்த முஸ்லிம், தமிழ் வாலிபர் சேல்ஸ்மன் தேவை. தங்குமிட வசதி உண்டு- விபரங்கள் நேரில் சந்திக்கவும்- மரைக்கார்ஸ் ஷொப்பின் ஸென்டர், இல 275, மெயின் வீதி, பாணந்துறை-

வி இ 032092

## கமரா உபகரணம் தேவை

புதிய அல்லது சிறிது பாவித்துள்ள கமராக்களுக்கும் உபகரணங்களுக்கும் நியாயமான விலை கொடுக்கப்படும்- "கொழும்பு கிப்ட் ஹவுஸ்" 42, கெய்சர் வீதி, (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை-

Colombo Gift House

வி இ 032632

## மலையாள மந்திர வசியம்

மாந்திரீகத் துறையில் நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உண்மை சேவை புரியும் என்னிடம் வாருங்கள்- குடும்பப் பிணக்கா, திருமணத் தடையா, வியாபார வசியங்களா, காதல் 24 மணி நேர வசியங்களா, தீராத நோயா, பேயா, சூனிய நிவர்த்தியா, தெளிவான கம்பியூட்டர் ஜாதக விளக்கமா, ஜோதிட மாந்திரீக தத்துவஞானி பி கே சாமி, 33, தினச்சந்தை, நவரெலியா- தொலைபேசி- 2508.

வி இ 1066

ஸ்ரீமும சேர்ந்தது) விற்பனைக்கு உண்டு- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி எம வி எஸ் ஹமீட், சாய்பு வீதி, கல்முனை-5, தொலைபேசி இலக்கங்கள்- 067-2301, 2526, 2559 ஆகியன-

## வீட்டுப் பணிப் பெண்

வீட்டு வேலைக்கு பெண் பிள்ளை தேவை- மாத சம்பளம் ரூ- 1000/- நேரில் அல்லது எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்- விளம்பரதாரர் ரீ/3/9 என்டசன் தொடர் மாடி, நாராஹேன்பிட், கொழும்பு-5

வி இ 032325

## தங்குமிட வசதி தேவை

கண்டி நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் முஸ்லிம் வீட்டில் அறை தேவை-

Razak V.C. 109, Udagama Ampitiya

வி இ 031660

## மாந்திரீக வசியம்

சர்வமத சன்மார்க்க, புனித புராதன தெய்வீக, வைத்திய மஹா மாந்திரீக நிபுணர் எஸ் ஏ எம பி (இந்தியா) ஆர் எச் எம பி - டி ஏ சி (இலங்கை) சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட டாக்டர் மந்திரயோகியிடம் காதல், திருமணம், கல்வி, பரீட்சை, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம் சகல காரியங்களிலும் வெற்றியடைய இவை போன்ற சாதாரண மாந்திரீக வசிய விடயங்களுக்கு பூசைச் செலவு 200 ரூபா தீராத நோய், பேய், சூனியங்களையும் பார்த்துக் கொள்ளலாம்- டாக்டர் மந்திரயோகி, குருசக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு-

(Batticaloa) Sri Lanka

வி இ 0304

## முதர்ரிஸ் தேவை

குர்ஆன் மத்ரஸா நடாத்த தகுதியும் திறமையுமுள்ள முதர்ரிஸ் ஒருவர் தேவை- உணவு தங்குமிட வசதி உண்டு- தகுதியுள்ளோர் மார்ச் 10 க்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்- செயலாளர், ஜும்ஆப் பள்ளிவாயல், ஆண்டியாக்கடவத்தை, கமபளை.

வி இ 1632

## இஸ்லாமிய மாந்திரீகம்

இன்ஷா அல்லாஹ் உங்களது இஸ்மும அஸ்மா வேலைகள் எதுவானாலும் நம்பிக்கையோடு செய்வதற்கு சனி, ஞாயிறு, போயா விடுமுறைத் தினங்களில் நேரில் வருக- (இடம்- எலுவில பள்ளிவாசலுக்கு சமீபமாக)-

Sulfika Buhary Shams al Manzil 17 Eluwila. Panadura

வி இ 032035

## வைத்திய சேவைகள்.

இளைஞர்களே!] தீய பழக்கங்களாலும் சுய இன்பத்தாலும் சீரழிந்து பெலமிழந்து பாலுறுப்பு வீரியமின்றி நரம்புத் தளர்ச்சியால் மனம் பாதித்தவர்களும், தாம்பத்தியத்தில் தோல்வியடைந்து துடிப்பவர்களும் எமது மனோதத்துவ வைத்தியத்தால் (தீய பழக்கத்தை மாற்றி) உயர்தர மூலிகை மருந்துகளைப் பாவித்து வெற்றி வீரர்களாக மாறுங்கள்- மாதாந்தம் 10—16 ம திகதி வரை டண்டாரவளை ஸ்ரீ கல்யாணி கடையிலும் 20—26 ம திகதி வரை திருகோணமலை பரமஜோதி மெடிக்கல் ஸ்டோரிலும், சனிக்கிழமைகளில் கல்முனை டி எம எம ஸ்தாபனத்திலும் சந்திக்கலாம்- மற்ற நாட்களில்- பி ஆறுமுகம் வைத்தியர் (ஆயர்) 15/3, புகையிரத வீதி, மட்டக்களப்பு-

வி இ 0304

உங்களுடைய தேவைகளை என்னால் பூர்த்தி செய்து தர முடியும்- பொருத்தமான திருமணம் கைகூடவும், காதலன் - காதலியின் மனதை வெல்லவும் வெறுத்தவர்களை நீக்கி விரும்பியவர்களை வசப்படுத்தவும், எந்தக் கொடூர நபரையும் அடக்கவும், விரும்பியவர்களை வசப்படுத்திக் கொள்ளவும், கணவன் - மனைவி ஒற்றுமையாக இருக்க, வியாபாரம், விவசாயம் கைத்தொழில் முன்னேற்றம் அடையவும் எந்த வகையான மன வேதனையோ கவலையோ, பிரச்சினையோ, இருந்தால் எழுதி கேளுங்கள் இல்லாவிட்டால் சந்தியுங்கள்- இரகசியம் வெளியிடப்பட மாட்டாது- பி எம திசாநாயக்கா, இல- 55, மிகுந்த மாவத்தை, கொழும்பு-12 தொலைபேசி- 433955 சந்திக்கும நேரம காலை 8 மணி 12 மணி வரை-

வி இ 032619

## மாந்திரீக வசியம்

காதலன், காதலியை வசியம் செய்து திருமணம் செய்ய பிரிந்து சென்றவர்களை வரவழைக்க, விரும்பியவர்களை, பிரச்சினை கொடுப்போர்களைத் தன் வசப்படுத்த, உதவி பெற, கணவன், மனைவி பிரச்சினைகள் தீர, இவைகள் போன்ற விசேட வசியங்களுக்கு பூசை செலவு 350 ரூபா விரும்பிய மாந்திரீக வசியம் செய்து கொள்ள நேரில் வர முடியாதவர்கள், வெளிநாட்டில் இருப்போர்கள் விருப்பங்களையும் சம்பந்தப்பட்ட ஆண், பெண் பெயர்களையும் எழுதி விலாசமிட்ட முத்திரைக் கவரும் அனுப்பி ஆலோசனைகள், மருந்து மந்திரப் பொருட்களை தபாலில் பெற்று பயன் அடையலாம்- டாக்டர் மந்திரயோகி, குருசக்தி நிலையம் கல்லடி, மட்டக்களப்பு-

(Batticaloa) Sri Lanka

வி இ 0304

பின்னர் இவர்கள் புரிந்த குற்றம் ஒப்புவிக்கப்பட்டால் சகலரும நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்-

இப்படி அவர் தெரிவித்தார்-

அவசரகாலப் பிரமாணங்கள் சிலவற்றை நீக்கிய பின்னரும பல்வேறு இடங்களில் ஆட்கள் கொல்லப்படுகின்றனர்- சடலங்கள் எரிக்கப்படுகின்றன-

இவற்றுக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய கொழும்பிலிருந்து விசேட விசாரணைக் குழுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று பொலீஸ் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்-

[ண—007]

## கருத்தரங்கு

கொழும்பு மார்ச் 3

இலங்கை தமிழ் நாடகப் பேரவை நாடகப் பிரதி எழுதல் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றை தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்துள்ளது-

இது சம்பந்தமான கருத்தரங்கும், கலந்துரையாடலும் கொழும்பு இரணைச் சேர்ந்த வக்சோல் வீதியிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நடைபெறும்-

★

கொழும்பு மார்ச் 3

கொழும்பு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கிளை ரஷ்ய கவிஞர்கள் பற்றும் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது-

இது கொழும்பு-7 சுதந்திர சதுக்கத்தில் உள்ள சோவியத் கலாசார நிலையத்தில் இன்று காலை 9-30 மணிக்கு இடம் பெறும்-

(5)

## நினைவஞ்சலி



சின்னையா கிருஷ்ணசாமி கவுண்டர்

அன்னை மடியில் 18-10-1927

இறைவன் மடியில் 03-02-1990

(இளைப்பாறிய புகையிரத சாரதி நாவலப்பிட்டிய)


அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், அன்பின் நிறைகுடமாய் எமமை எல்லாம் கண்ணை இமை காப்பது போல் காத்து ஆளாக்கி ஆறாத் துயரில் எமமை ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட அன்பு தெய்வமே என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம-

அன்பு மனைவி,
மகள்மார்கள் மருமகன்மார்கள்,
உற்றார், உறவினர்கள்-
ஜெயராம அரங்கல எஸ்டேட்
நாவலப்பிட்டிய-
குமார் லங்கா ...
ரமேஸ், இல- 121/1 ஸ்டேசன் ரோட் உலப்பனை-

வி இ 032468

# 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற புரட்சி!

## கொம்பியூட்டர் ஆற்றும் சாதனை



கொம்பியூட்டர் என்னும் கணினியின் படம்,

புரட்சி!

பலாத்காரப் புரட்சி பயங்கரமானது.

அறிவுப் புரட்சி ஆக்கபூர்வமானது.

உலகத்தின் சரித்திரத்தைப் பல முறை மாற்றியமைத்த பெருமை புரட்சிகள் என அழைக்கப்படும் பலாத்கார மாறுதல்களுக்கு உண்டு.

1775 இல் பிரித்தானிய சாம்ராஜ்யத்திலிருந்து அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்த மக்கள் நடாத்திய புரட்சி ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற புதியதொரு நாட்டையே சிருஷ்டித்தது.

1789 இல் பிரஞ்சு நாட்டு மக்கள் மன்னரின் முடியாட்சியை புரட்சி மூலம் தூக்கி எறிந்து விட்டு குடியாட்சியை நிலைநாட்டினர்.

1917இல் லெனின் — டிராட்ஸ்கி போன்ற தலைவர்கள் ரஷ்ய அரசியலில் நடாத்திய புரட்சி கம்யூனிஸம் என்ற புதியதொரு சித்தாந்தத்தை உலகிற்கு தந்தது.

இந்தப் புரட்சிகளின் போது பலாத்கார முறைகள் கைக்கொள்ளப்பட்டன. கத்தி, துப்பாக்கி போன்றவை உபயோகிக்கப்பட்டன. இரத்தம் சிந்தப்பட்டது. மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் அழிவுகள் ஏற்பட்டன.

ஆனால் கத்தியின்றி இரத்தம் இன்றி சரித்திரத்தில் நடந்த ஒரு புரட்சி உண்டு.

இந்தப் புரட்சியில் கத்திக்கு பதில் சக்திக்கு இடமளிக்கப்பட்டது. இரத்தத்திற்கு பதிலாக இயந்திர சத்தம் இருந்தது. அழிவுக்கு பதிலாக ஆக்கங்கள் இருந்தன.

இந்தப் புரட்சியை கைத்தொழிற் புரட்சி—இன்டஸ்ரியல் றெவலூஷன் (Industrial Revolution) என்று கூறுவர்.

1750 ம் ஆண்டுக்கும் 1850 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தானிய மக்களின் வாழ்க்கைத் தொழிலாகவும் விளங்கிய நெசவுத் தொழில் இயந்திரமயமாகியது.

இதுவரையும் கைகளால் நெய்யப்பட்டு வந்த துணிகள் நீராவியால் இயங்கும் நூற்பாலைகளில் தயாராகின.

தொழிற்சாலைகள் பலவும் நீராவியின் சக்தியை உபயோகித்து இயங்கின.

இதனால் உற்பத்தி பல மடங்கு பெருகியது. இதுவரை விவசாய நாடாகவும் கைகளை உபயோகித்தே தொழில் புரிந்த மக்கள் வாழ்ந்த நாடாகவும் விளங்கிய இங்கிலாந்து கைத்தொழில் நாடாக உலகில் பரிணமித்தது.

போக்குவரத்து துறையும் நீராவிச் சக்தியின் வரவால் பெரும் மாற்றங்களுக்கு உள்ளானது.

### சித்ரா அருள்ராமலிங்கம்

குதிரை வண்டிகளும் கைவண்டிகளும் ஓடித்திரிந்த லண்டன் நகரத் தெருக்களில் நீராவியால் இயங்கும் மோட்டார் வாகனங்கள் ஓடின.

நீராவியின் சக்தி கொண்டு அநேக பயணிகளை சுமந்து செல்லக் கூடிய வாகனங்கள் ரயில்கள் என்றபெயரில் உருவாகின. கடலில் பிரயாணம் செய்வதற்கு நீராவிக் கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டன.

இந்தப் போக்குவரத்து மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க புழுதி நிறைந்த லண்டன் தெருக்கள் புதிதாக கல் பதிக்கப்பட்ட தெருக்களாக மாறின. நகரங்களையும், கிராமங்களையும் ஊடறுத்து ரயில் இருப்பு பாதைகள் போடப்பட்டன.

இதனால் நாடுகளுக்கிடையேயும், நகரங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்தப் புரட்சியை இன்போமேஷன் றெவலூஷன் (Information Revolution) தகவல் புரட்சி என்று அழைக்கின்றார்கள்.

கைத்தொழில் புரட்சியின் போது நீராவி எப்படி ஒரு பெரும் பங்கை வகித்ததோ அது போல் தகவற் புரட்சிக்கு கொம்பியூட்டர் என்ற பொறி பெரும் உதவி செய்து கொண்டிருக்கிறது.

இந்த உலகத்தில் எத்தனையோ விஷயங்கள் தொட்டம் தொட்டமாக பரவிக் கிடக்கின்றன. இவை உங்களைப் பற்றியதாக இருக்கலாம், உலகைப் பற்றியும் இருக்கலாம், அவை விஞ்ஞான முடிவுகளாக இருக்கலாம், விவேக சிந்தனைகளாகவும் இருக்கலாம். இவைகளை கொம்பியூட்டர் இயலில் டேட்டா (Data) அதாவது தரவுகள் எனச் சொல்வர்.

தரவுகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு உண்மை என்றாலும் அவற்றைத் தனித் தனியே எடுத்து நோக்கும் போது அவற்றிலிருந்து எதுவித பிரயோஜனமான விளக்கமும் எமக்கு கிடைக்காது.

இந்த தரவுகள் ஒழுங்காக தரம் பிரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டு, தர்க்க ரீதியாக நோக்குமிடத்துத் தான் அவை எமக்கு விளக்கமாக புரிகின்றன.

இப்படியாக மாற்றப்பட்ட தரவுகள்தான் இன்போமேஷன் (Information) எனப்படும் தகவல்களாகும்.

உதாரணமாக— அந்த வீட்டில் வெளிச்சம் எரிகிறது; அங்கு ஒரு வீடு இருக்கிறது என்று இரண்டு விஷயங்களும் தரவுகள், இந்த ட்டத்து கிடைக்கும் தகவல்.

தரவுகள் ஒழுங்குபடுத்தப்படுவதும் தரம் பிரிக்கப்பட்டு தகவலாக பரிமாற்றம் அல்லது பரிவர்த்தனை செய்யப்படுவதையும் மொத்தமாக புரோசெஸிங் இன்போமேஷன் (Processing Information) என்று சொல்வார்கள்

தரவுகள் தகவலாக பரிமாற்றம் செய்யப்படும் போதுதான் மனிதருக்கு உபயோகமாகின்றன இந்த தகவல்களில் இருந்துதான் மனித குலத்தை மேம்படுத்த விஞ்ஞான ஆய்வுகள் நடாத்தப்படுகின்றன. அரசியலில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

தரவுகளைத் திரட்டுவது அவற்றை சேமித்து வைப்பது அவற்றை ஒழுங்காக பட்டியல் இடுவது பின்னர் அவற்றை தேவைப்படும் போது தேர்ந்தெடுப்பது தேர்ந்தெடுத்தவற்றில் முடிவு தெரிவு செய்வது போன்ற தகவல் பரிமாற்றம் செய்யும் பணியில்தான் இன்று கொம்பியூட்டர் மகத்தான சேவை செய்து வருகின்றது.

கைத்தொழிற் புரட்சியினால் மனித உடலின் ஆற்றலுக்கு இராட்சத பலம் கிடைத்தது.

அதுபோல் தகவற் புரட்சி மனிதனின் மன ஆற்றலுக்கு அறிவுத் திறனுக்கு இராட்சத ஆற்றலைக் கொடுத்து மனிதனை மீ மனிதன் அதாவது சுப்பர் மேன் (Superman) ஆக்கிக் கொண்டிருக்கிறது.

எமது மூதாதையர் ஆற்றிய சாதனைகள் அவர் தந்த சிந்தனைகளிலிருந்து நாம் இன்று அவர்களைப் பற்றி புரிந்து கொள்கின்றோம்.

பாலைவனத்தின் நடுவே உள்ள பிரமாண்டமான பிரமிட்டு கோபுரங்கள் எகிப்தியரை நினைவுபடுத்துகின்றன.

அழகிய கட்டடக் கலைக்கும் கால்வாய்களுக்கும் ரோம நகரமும் அங்கு வாழ்ந்த மக்களும் நினைவுக்கு வருகின்றன.

தாஜ்மஹாலும் தஞ்சை பெரிய கோவிலும் இந்திய மண்ணின் கலை, கலாசாரம் நாகரீக வளர்ச்சி என்பவற்றை தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன கண்டுபிடிக்கப்பட்டு ஒரு பத்து ஆண்டுகளுக்குள்ளேயே பாவனைக்கு வந்து விடுவதாக தெரிகிறது.

1958 இல் கண்டுபிடிக்கப்பட்ட லேசர் (Laser) என்ற ஒளிக்கற்றை அடுத்த ஏழு வருட காலத்துக்குள்ளேயே உற்பத்தி துறையிலும் சத்திர சிகிச்சை துறையிலும் பரவலாக உபயோகமாக தொடங்கிவிட்டது.

அதுபோல் 1950 லிருந்து இன்றுவரை கொம்பியூட்டர் உலகு நாலு தலைமுறைகளைத் தாண்டி ஐந்தாவது தலைமுறையில் அடியெடுத்து வைக்கிறது.

இன்று உங்களுக்கு வருகின்ற பாவனை கட்டண பட்டியல் எதுவாக இருந்தாலும் சரி மின்சார பாவனை குடிதண்ணீர் பாவனை வருமான வரி தொலைபேசிக் கட்டணம் வங்கியில் இருந்து வரும் வரவு செலவு வைப்புகளைச், காப்புறுதி அறிவுறுத்தல்கள் குழந்தைகளின் பரீட்சை முடிவுகள் யாவும் கொம்பியூட்டரின் "கைபட்டு"த்தான் எம் கைகளுக்கு கிடைக்கின்றன.

விஞ்ஞானத்துறை மருத்துவத்துறை போக்குவரத்துத்துறை, விண்வெளிப் பயணம், கட்டிட நிர்மாணத்துறை, இயந்திர வடிவமைப்புத் துறை மொழியியல் துறை, குற்றவியல் துறை, கல்வித் துறை இப்படி ஏறக்குறைய எழுநூறு துறைகளில் கொம்பியூட்டரின் உபயோகம் இருந்து கொண்டிருப்பதாக அறிகின்றோம்.

இவற்றைத் தவிர நாம் அன்றாடம் உபயோகப்படுத்துகின்ற கைக்கடிகாரம், கடிகாரம், வானொலி, தொலைக்காட்சி, விடியோ, மின் அடுப்பு, மின் சலவை இயந்திரம், ஏர்கண்டிஷனர்கள், குளிர்சாதன பெட்டி போன்ற ஆயிரக்கணக்கான வீட்டு உபகரணங்களிலும் அலுவலக உபகரணங்களிலும் ஒரு குட்டி கொம்பியூட்டர் இருந்து கொண்டு அந்தந்த உபகரணங்களின் பணியை செவ்வனே கண்காணித்து வருகிறது.

அது மட்டுமல்லாமல் இன்று கொம்பியூட்டர்கள் மலிவாகவே கிடைப்பதால் நிறைய உபயோகமாகின்றன. மனேஜர்களிலிருந்து மாணவர்கள் வரை சொந்தமாக கொம்பியூட்டர்கள் வைத்து உபயோகித்து வருகின்றனர்.

இன்று நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி கொம்பியூட்டர்களுடன் எமது வாழ்க்கையை பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளோம்.

கொம்பியூட்டர்களோடு நாம் வாழ அவற்றைப் பற்றிய அறிவு கொம்பியூட்டர் பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமாகிறது. அவை எப்படி அமைந்துள்ளன எப்படி இயங்குகின்றன எப்படி உபயோகமாகின்றன என்பதை அறிந்து கொண்டால்தான் —

(11ஆம் பக்கம் பார்க்க)

'கொம்பியூட்டர்' என்ற


அவுஜா

அம்ப்ளிபயர், மைக்ரபோன், ஒலிபெருக்கி
உபகரணங்கள் தரத்தில் மிகச் சிறந்தவை!

தற்போது விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. இப்பொழுது பலவித ரகங்களில் ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
230V ஏசி அல்லது 12V கார் பட்டரியில் பாவிக்கக் கூடியது.

★ 25 வாட்ஸ் ரூ. 2950/- ★ 30 வாட்ஸ் ரூ. 3150/-
★ 45 வாட்ஸ் ரூ. 4450/- ★ 60 வாட்ஸ் ரூ. 6450/-
★ 125 வாட்ஸ் ரூ. 8500/-
★ 150 வாட்ஸ் ரூ. 11,765/-

# ‘கொம்பியூட்டர்’ என்ற ‘கணினி’யின் கதை



...த்தில் இங்கிலாந்து நாட்டிலே தொழிற் துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த மாற்றங்கள் மக்கள் சமூகத்திலும் அவர்களின் பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தின. இந்த மாற்றங்களையும் அதனால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளையும் கைத்தொழிற் புரட்சி என்று சரித்திரவியலார் கூறுவர்.

மற்றையப் புரட்சிகளைப் போல் இந்தப் புரட்சிக்கும் ஒரு முக்கிய நபர் காரணகர்த்தாவாக இருந்தார். அவர்தான் திருவாளர் நீராவி.

இன்று எமக்கு இடியப்பமும் இட்டலியும் அவிப்பதற்கு நீரை கொதிக்க வைத்து பெறுகிறோமே அதே நீராவிதான் அன்று ஒரு பெரிய சமூகப்புரட்சி ஏற்பட காரணமாக இருந்தது.

நீராவியின் சக்தி பற்றி அன்று பெரிய ஆய்வுகள் ஆய்வு கூடங்களில் நடைபெற்றன.

இதன் பலனாக நீராவியை நீராவியின் சக்தியை உபயோகித்து இயங்கக் கூடிய இயந்திரங்கள் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டன.

பல மனிதர்கள் தமது உடலை வருத்தி பல மணி நேரம் புரிகின்ற பணிகளை.

நீராவி இயந்திரத்தின் உதவியினால் இலகுவாகவும் துரித கெதியிலும் செய்ய முடிந்தது.

முக்கியமாக பிரித்தானிய நாட்டின் தேசியத் தொழிலாகவும் பிரியும், மக்களுக்கிடையேயும் தொடர்புகள் அதிகரித்தன நாடுகளுக்கிடையே இருந்த தூரம் கால அளவில் குணக்கிடும் போது குறைந்து கொண்டே வந்தது.

கிராமங்கள் நகரங்களாக மாறின. நகரங்கள் தொழில் நகரங்களாக உருமாறின, கிராமத்திலிருந்து நகரம் நோக்கி மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இந்த கைத்தொழில் புரட்சியின் தாக்கம் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அறியப்பட்டது.

இதனால் மனித குலத்தில் எதிர்பாராத அளவு சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாளி தொழிலாளி வர்க்கங்கள் உருவாகின. பொருளாதாரம் பெருகியது நாள் முழுதும் உழைக்க வேண்டிய கட்டாயம் இல்லாததால் மக்களின் எண்ணத்தில் கலை, கலாசாரம் விஞ்ஞானம் போன்றவைக்கு நேரமும் இடமும் கிடைத்தன. மனித நாகரீகம் ஒரு புதுப் பொலிவு பெற்றது.

சுருக்கமாக கூறினால் ஒரு நவீன புதிய உலகம் ஒன்று கைத்தொழில் புரட்சியினால் சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்லலாம்.

கைத்தொழிற் புரட்சிக்கு பிறகு ஒரு நூறு ஆண்டுகளுக்கு பின்னர் இன்னொரு புரட்சியை நமது உலகம் நடாத்திக் கொண்டிருக்கிறது.

இந்தப் புரட்சியும் நமது சமூகத்தில் பெரும் மாற்றங்களை இரண்டு விஷயங்களும் உண்மைச் செய்திகள். அவற்றை மேலே தரப்பட்ட ஒழுங்கிலேயே நாம் எடுத்துக் கொண்டால் அவை எமக்கு விளங்கக் கூடிய உதவக் கூடிய செய்தி ஒன்றையும் தரவில்லை. இதனால் எமக்கு குழப்பம் தான் மிஞ்சுகின்றது.

மேலே தரப்பட்ட தரவுகளிலிருந்து எமக்கு ஏதாவது புரிகின்றதா?

ஒரு வீட்டில் வெளிச்சம் எரிகின்றது. என்பது தெரிகிறது அடுத்த வசனத்தில் உள்ள “வீடு” வெளிச்சம் எரிகின்ற வீட்டைத் தான் குறிப்பிடுகின்றதா அல்லது வேறொரு வீட்டைக் குறிப்பிடுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இனி இந்த தரவுகளை ஒழுங்குபடுத்தி வாசிப்போம். ஒழுங்குபடுத்தியதும் வசனங்கள் இடம் மாறுகின்றன. ஒழுங்குபடுத்திய தரவுகள் இப்படி வருகின்றன.

அங்கு ஒரு வீடு இருக்கின்றது. அந்த வீட்டில் வெளிச்சம் இருக்கின்றது. இப்பொழுது தரப்பட்ட தரவுகளில் விளக்கம் இருக்கின்றது அல்லவா?

இனி ஒழுங்குபடுத்தப்பட்ட மேற்படி தரவுகளிலிருந்து ஒரு தகவல் பெறப்படுகிறது “அந்த வீட்டில் யாரோ இருக்கின்றார்கள்” என்ற தகவல் தான் கிடைக்கப் பெற்ற தரவுகளை ஒழுங்குபடுத்தி தர்க்க ரீதியாக நோக்கும்...

...ணின் கலை, கலாசாரம் நாகரீக வளர்ச்சி என்பவற்றை தெளிவாக விளக்குகின்றன.

இவற்றைப் போல் நாளைய சந்ததியினர் நம்மை நினைவு வைப்பதற்கு நாம் சாதித்துள்ள சாதனைகள் எவை?

வானுயர்ந்த கட்டிடங்களை நிர்மாணித்த எமது திறமையா?

விண்வெளியில் விளையாடித் திரிந்த விஞ்ஞான புதுமையா?

கொல்லாத நோய்களை பூவுலகில் இருந்து துரத்தியடித்த பெருமையா?

இவற்றில் எதனை வைத்து நாம் வாழுகின்ற இந்த பொற்காலத்தை நாளைய சந்ததி எடைபோடப் போகிறது?

இவற்றில் எதுவுமே பிரமாதமான சாதனைகள் இல்லை என்றே கூறவேண்டும்.

ஆனால் இத்தனை சாதனைகளையும் இதற்கு மேல் இன்னும் நாம் சாதிக்க இருக்கின்ற சாதனைகளையும்.

நாம் செயலில் காட்ட நமக்கு தோளோடு தோள் நின்று உதவுகின்ற கொம்பியூட்டரும் அது நடத்திக் கொண்டிருக்கின்ற தகவல் புரட்சியும் தான் நாளைய சந்ததியினர் முன் நம்மை தலை நிமிர்ந்து நிற்கவைக்கப் போகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு இந்த கொம்பியூட்டர்.

ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பு என்பது சாதாரண மனித பாவனைக்கு வருவதற்கு ஒரு சில ஆண்டுகள் பிடிக்கும்.

முதலாம் உலகப் போர் நடந்த காலகட்டத்தில் ஒரு கண்டுபிடிப்புக்கும் அதன் பாவனைக்கும் இடையில் சராசரி முப்பது ஆண்டுகால அவகாசம் இருந்ததாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன,


ஆனால் இன்றோ ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு அது கண்டுபிடி...


★ 125 வாட்ஸ் ரூ. 8500/-
★ 150 வாட்ஸ் ரூ. 11,765/-
★ 200 வாட்ஸ் ரூ. 12,200/-


இப்பொழுது கைவசம் உண்டு
சகல மொடல்களும் மின்சாரத்திலோ பாட்டரியிலோ இயங்கக் கூடியன



யூனிற்



அம்பிளிபயர்



மைக்ரபோன்



ஹோர்ன்

சகல அவுஜா உபகரணங்களும் ஒரு வருட உத்தரவாதமுடையன
சகல உதிரிப்பாகங்களும் எப்பொழுதும் எம்மிடம் கைவசம் உண்டு.

★ கோவில்களுக்கு
★ பள்ளிவாசல்களுக்கு
★ பள்ளிக்கூடங்களுக்கு
★ தேவாலயங்களுக்கு

விசேஷ கழிவு உண்டு

ஏக இறக்குமதியாளர்கள்-

றெபேட் ஏஜன்சீஸ் லிமிட்டெட்

88, றெக்கிளமேசன் றோட் (என் எச் எம் அப்துல் காதர் றோட்)
கொழும்பு—11.

# முஸ்லிம் சமுதாயத்தின் காலக் கண்ணாடி சிந்து

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" தொடர் கதையில் மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்த தோழிகளின் முத்தத்தால் கண்ணீர் சிந்திய பிரேமினி தேன் மொழியின் குடும்பக் கண்ணீரைத் துடைப்பாரா? அல்லது கண்ணீரில் மிதக்க வைப்பாரா?

— ஏ எல் எம சபருன்னா, தலவாக்கொல்லை.

★

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" தொடர் கதை ஒவ்வொரு ஞாயிறும ஒவ்வொரு ருசியைத் தருகிறது!

— இஸ்மாயில் எம பாறுக். கொழுமபு—14.

★

"சமுதாயத்தை உலமாக்கள் குழப்பமா?" என்ற தலைப்பில் "முஸாபிர் பார்வை" கட்டுரை காலத்துக்கு ஏற்றது. இந்த தள்ளாத வயதிலும பொல்லா வமபு ஏன் முஸாபிருக்கு!

— பர்ஸானா ரமீஸ், வான் வீதி.

★

"கொமபியூட்டர்" என்ற "கன்னி"யின் கதையை கட்டுரைகளாகத் தரப் போவதை யிட்டு பெரிதும மகிழ்ச்சியடைகிறேன். கொமபியூட்டரைப் பற்றி முழுமையாக அறிய வேண்டுமென்ற ஆவல் கொண்டிருந்த எனக்கு இக்கட்டுரைகள் மிகவும பயன் தரும் என நினைக்கிறேன்.

— செல்வி கைரியா ரஷீத், திக்குவல்லை.

★

"தாயும சேயும" பகுதியில் "அன்பு, பண்பு, பொறுமை பெண்ணுக்கு அவசியம" என்ற தலைப்பில் சகோதரி முமதஹினா இல்யாஸ் எழுதிய கட்டுரை ரொமப வரவேற்கத் தக்கது.

— செல்வி ஜரீனா ஜெலால்தீன், தெல்தோட்டை.

★

மயிலனைய மங்கையின் எழிலை மதுரகவியில் தந்த விதம மனதை கொள்ளை கொண்டது! மற்றும கவிக்கடை கவிராஜன் என்ற இலக்கியத் தரம கொண்ட நகைச்சுவை நீண்ட நாட்களுக்குப் பிறகு நிறைவான நகைச்சுவையை நயந்த சுவைத்த திருப்தியை நல்கியது!

— எஸ் பிரபாகர், மாத்தளை.

★

தேநீரும சிகரெட்டும துணை நிற்க, பொழுதை வீணாக்கும அரைகுறைகளை "சுத்தச் சோமாரிகள்" என வர்ணித்த திரிஞானி சார் வாழ்க! "கவிக்கடை கவிராஜன்" நகைச்சுவைக் கதை என்னை ஓரளவு சிரிக்க வைத்தது.

— எம எம கமால், மாத்தளை.

★

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" என்ற வித்தியாசமான தொடர் கதையின் மூலம வாசகர்களை வசீகரிக்கும சிந்துவே! நண்பர்கள் கூட விரோதியாகலாம என்பதை சுட்டிக் காட்டிய நீ, இவ்விஷப் பரீட்சையில் ஜெயிக்கப் போவது யார் என்ற வினாவையும வாசக நெஞ்சங்களில் ஏற்படுத்தி விட்டாயே!

— செல்வி றிஸானா முஹமமட், அக்குறனை.

★

"பரீட்சைக் கட்டணம" என்ற "சின்னஞ் சிறுகதை" என்னை கண்ணீர் சிந்த வைத்தது.

— எஸ் எம சுபியான், சிறாஜ் நகர்.

★

"மயிலனைய மங்கை"க்காக மர்மக் கவிஞர் வடித்த முத்தான முகப்பு என் நெஞ்சைத் தொட்டது! வரிக்கு வரி வெரி "இண்ட்

## பரஸ்பரம்

ரஸ்"ட்டாக இருந்தது. மர்மக் கவியே! எப்படித்தான் உன்னிடத்தில் இப்படி மர்மமோ?

— செல்வி சுல்பிகா ராசிக், ராஜகிரிய.

★

"மயிலனைய மங்கை" முகப்புக் கவிதை தேன் துளிகளாய் வரிக்கு வரி நாவினை சப்புக் கொட்ட வைத்தது! மர்மக் கவிஞரே உமக்கொரு சபாஷ்!

— முஹமத றெளிஹாஜ் குறிஞ்சாக்கேணி – 2.

★

"கணனி", "கணினி" — கல்குலேட்டர், கொமபியூட்டர் தமிழ் விளக்கத்தை தந்த "சிந்து"வைப் பாராட்டத்தான் வேண்டும! கசிப்பு மரணங்களால் ஏற்பட்ட பரபரப்பு கட்டுரை நல்ல படிப்பினையூட்டுவதாக அமைந்தது. இதை வாசித்த பிறகாவது ஒரு

திரு திருநாவுக்கரசு தொடர்ந்து தமது கோரிக்கையை வலியுறுத்தி ஞாயிறு 2 மணி நேர பகல் ஒளி பரப்பை எமக்குப் பெற்றுத் தர வேண்டும.

— செல்விகள் பி பிரபாஷினி, ஜே அனுஷா, எம நிரோஷினி, வத்தளை.

★

"சீதனக் கொடுமையால் தீக் குளித்து பெண் மரணம". "கணவன் 3 குழந்தைகளைக் கொன்ற பெண்," என்ற இரு கட்டுரைகளும எமமை வியப்பிலே ஆழ்த்தின.

— செல்விகள் எம டி பர்ஸானா, எம டி பஸ்னா, கொட்டராமுல்லை.

★

நகைச்சுவைப் பக்கம புரட்டினேன் பொன் சுரேந்திரன் எழுதிய "கவிக்கடை கவிராஜன்" என்ற நகைச்சுவை கதையை படித்து வயிறு குலுங்கச் சிரித்தேன்... சும்மா சொல்லக் கூடாது சார்... இது தான் நமபர் வன் நகைச்சுவை.

— எம எல் அக்ரம லியாவுதீன், பறகஹதெனிய.

★

ஒரு எழுத்தாளனின் நயமான கருத்தை சுதந்திரமாக எழுத முடியாத அவல நிலையை "மழை எப்போது!" என்ற சிறு கதை உணர்த்தியது.

— செல்வன் எம ஆனந்தராஜ், தெஹிவளை.

★

அன்பின் முஸாபிர் அவர்களே! உங்கள் பேனாவுக்கும வாசகர் எம சிந்தனைக்கும ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஏனெனில் முஸ்லிம சமுதாயத்தின் முதுகெலும்புகளாகிய

என்றால் சிஙகம. அடலேறு என்றால் போரிடும சிஙகம என்ற பொருள். கடந்த 80 ஆண்டுகளாக சிஙகக் கூட்டத்தையே எதிர்த்துப் போரிட்டு அடிமைத் தளையை அறுத்தெரிந்து வெற்றி கண்ட போர்ச் சிஙகம அல்லவா தொண்டமான்? அதனால் தான் அவரை அடலேறு என்ற அடைமொழியிட்டு அழைக்கப் பட்டார்.

ஆ—ர்

★

கொமபியூட்டரைப் பற்றி முழுமையாக அறிந்த கொள்ள வேண்டுமென்ற எமது நெடு நாளைய ஆசையைப் புரிந்து கொண்டது போல் கொமபியூட்டர் என்ற கணினியின் கதையை கட்டுரைகளாகத் தரப் போவதை எண்ணி மிகவும மகிழ்ச்சியடைந்தோம. அத்தோடு "கணனி" "கணினி" இரண்டுக்கும உரிய வேறுபாட்டை இலக்கிய பீடத்தில் விளக்கியிருந்தமைக்கு மிக்க நன்றி.

— எம ஆர் எம முளீப், எம ஆர் எம மஃஹூம, திக்குவல்லை.

★

கமபியூட்டர், கல்குலேட்டர் என்பவற்றிற்குக் கணினி, கணனி என்பன சரியான மொழி பெயர்ப்புத் தான்! இந்த அழகு தமிழ் மொழி பெயர்ப்பை அறியத் தந்த "சிந்து" சிறப்பான பாராட்டுக்களைப் பெறுகிறாள்.

— எஸ் ஜெயகௌரி, எஸ் பகவதி, ஹொரமபாவ.

★

இலஙகையில் வெளியாகும தமிழ் பத்திரிகைகளில் ஏதாவது ஒரு பத்திரிகையை — "இலஸ்ட்ரேட்டட் வீக்லி" (படஙகளோடு கூடிய பத்திரிகை) எனச் சொல்வதானால் "சிந்து"வைத் தான் சொல்ல வேண்டும.

— றிஸ்வியூ முஹமமத் நபீல், கல்முனை—6.

★

இன்றைய உலகில் பல்வேறு துறைகளில் முன்னேறிய ஜப்பான் அரசியலில் மட்டும முன்னேற்றம காணவில்லை என்பதை சென்ற வார "பூலோக சஞ்சாரம" பகுதியில் எஸ் எஸ் எஸ் அருமையாக விளக்கினார்.

— ஐ ஹுமாயுன் கபீர்.

பெருமை அளிப்பதாக இருக்கிறது.

— எம சுரேஷ், எஸ் ராஜேஷ், கே ரதீஷ், நீர்கொழுமபு.

★

முகப்புக் கவிதைகளை பிரசுரிப்பதற்கு நடிகைகளது படம மட்டும தான் கிடைத்ததா? நடிகர்களின் படஙகளையும பிரசுரித்தால் என்ன? சிந்துவின் கவர்ச்சி ஏதும குறைத்து விடும என்ற பயமா?

— ஆர் ஜனார்த்தனன், எஸ் சிவகுமார், தெல்தொட்ட.

குறிப்பு:

அப்படி ஒரு பயமும இல்லை. நல்ல நடிகர்கள் என்ற வகையில் நமநாட்டு அரசியல்வாதிகளை அல்லவா பிரசுரிக்க வேண்டி வரும. அதற்கு என்ன செய்வதாம?

ஆ—ர்

★

முகப்புக் கவிதை மிகச் சுவையாகவே இருந்தது. அதில் ஏனத்தில் என்ற சொல்லினதும விதனம என்ற சொல்லினதும பொருளை தருவீர்களா?

— செல்வன் முன்ஸிர், முலாபர். கிரியுள்ள.

குறிப்பு:

ஏனம என்றால் கிண்ணம. பாத்திரம என்ற பொருள்களைப் பெறும. இந்தக் கவிதையில் தஙக ஏனம என்பது தஙகத்தால் செய்யப்பட்ட கிண்ணமாகும. விதனத்துக்குப் பொருள் தெரியாமல் கவிஞரே தவிக்கிறார். விளக்கத்தை இன்னும ஒரு கடிதத்தின் அடிக் குறிப்பில் காணலாம.

ஆ—ர்

★

சந்தேகத்தை சற்றும தவறாமல், சட்டென தீர்த்து வைத்த சிந்துவே! கமபியூட்டருக்கும கல்குலேட்டருக்கும சரியான தமிழ் சொல் என்ன என்று சந்தேகத்துடன் இருந்த எஙகளுக்கு "இலக்கிய பீடம" எனும பகுதியில் கணினி, கணனி என்று விளஙக வைத்ததற்கு நன்றி.

— பெ சந்திரசேகர் பொகவந்தலாவ.

★

சிந்துவின் மூலம கணினியின் வரலாற்றை எமக்குத் தரவிருக்கும திருமதி சித்ரா அருள் இராமலிஙகம அவர்களுக்கு எமது அட்வான்ஸ் நன்றிகள். விரையும விஞ்ஞான காலத்திற்கேற்ப முன்னேற்றத்திற்குரிய புதிய அமசஙகளை ஏந்தி வரும சிந்துவிற்கும எஙகள் பாராட்டுக்கள்.

— செல்வன் தர்ஷன், செல்லத்துரை, செல்விகள்: நிரோஷா மணிராஜ், ஷாந்தி புஷ்பராஜா, டிக்கோயா.

★

ஆஙகில வார்த்தைகளைக் கூட சிந்துவின் முகப்புக் கவிஞர் எவ்வளவு அழகாக இடமறிந்து நுழைத்து விடுகிறார்? வானத்து தாரகையைப் பவுடர் செய்து என்பதில் பவுடர் என்ற அந்த ஆஙகிலப் பதம எவ்வளவு அழகாக ஜொலிக்கிறது அந்த மயிலனைய மஙகையின் முகத்தைப் போல! சபாஷ்!

— பி வசந்தகுமார், கொழுமபு—13.

மில்க்வைற் தொழில்வகம்
MWS MILKWHITE

கொழுமபில் "மில்க்வைற்" சோப்வகைகள் மற்றும உற்பத்திகள் மொத்தமாகவும், சில்லறையாகவும பெற்றுக் கொள்ள நாடுஙகள்—

அண்ணா கோப்பி
இளை ஸ்தாபனம்
214–5– மெசஞ்சர் வீதி,
கொழுமபு–12

ஆங்கிலம்
90 மணித்தியாலங்களில்
பேசப் பழகுங்கள்
English Speaking Union
நடத்தும 8 வது குறுகிய கால பயிற்சி வகுப்புகள்—
இன்று ஆரமபம
ஆசையுள்ளோர் உடன் பதிவு செய்யவும
(சொற்ப ஆசனஙகளே உள்ளன)
314/2, காலி வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழுமபு–3 தொலைபேசி– 575843

டுபாய், ஓமான், பஹ்ரெயின் குவைட்
நாடுகளில் வேலை வாய்ப்பு
முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு

சுவைமிக்க உணவு வகைகளுக்கு
ஷிஹான் கேட்டரர்ஸ்
திருமண வைபவஙகள், வரவேற்பு உபசாரஙகள்,
விருந்து வைபவஙகள் மற்றும பார்ட்டிகளுக்கு சுவைமிக்க

துபாய், ஓமான், பஹ்ரெய்ன் குவைட்

நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு
எவ்வித கட்டணமும் இன்றி

வயது- 22 வயது முதல்
சம்பளம்- 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தர வாதமளிக்கப்படும்.

**யசோதா எண்டர்பிரைசஸ்**

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம், 4 ஆம் மாடி,
தாலி வீதி, கொழும்பு—03.
தொலைபேசி- 502868

தொழில் அங்கீகார/லைஸன்ஸ் இல:- ஏ எல்/647/11/89




## உங்கள் தலைமுடியின் உண்மைகள்

முடிஉதிர்ந்து வழுக்கைத் தலையாகி விடும் என்ற கவலையா, நம்பிக்கை இழக்காதீர்கள்- சமூக வாழ்வில் குறையுள்ளவன் என்ற மனப்பான்மையையும் விடுங்கள்-

உங்கள் உள்ளம் நல்ல இயற்கையான அடர்ந்த கேசத்தில் ஆசை வைத்துள்ளதா, இதோ உங்கள் முன் கோர்ண் உங்கள் ஏக்கத்தின் மருந்து-

கோர்ண் முடி உதிர்வதைத் தடுக்கின்றது- தாமதிக்காதீர்கள் உங்கள் தலையில் அளவுக்கதிகமான பொடுக்களையும் முடியுதிர்வதையும், சொறிச்சல் ஏற்படுவதையும், விரைவில் முடியானது ஈரத்தன்மை இழப்பதையும், எண்ணெய்த் தன்மை அளவுக்கதிகமாகி வருவதையும் அவதானிக்கின்றீர்களா, இவை யாவும் உங்கள் தலை விரைவில் வழுக்கையாகி போகிறது என்பதற்கான இயற்கையான எச்சரிக்கைகள்-



உங்கள் தேசத்தை விட இயற்கை அழகு வேறில்லை அதைப் பேணுவோம்- கோர்ண் கடந்த 25 ஆண்டு காலமாக பல்லாயிரக்கணக்கான மக்களின் கேச நோய் நிவாரணியாக இருந்து சேவை செய்கின்றது-

கேசவளத்திற்கு KOLN

Koln Koln Koln®


பாராட்டத்தான் வேண்டும். கசிப்பு மரணங்களால் ஏற்பட்ட பரபரப்பு கட்டுரை நல்ல படிப்பினையூட்டுவதாக அமைந்தது. இதை வாசித்த பிறகாவது ஒரு சிலர் திருந்துவார்களானால் அது "சிந்து"விற்கு கிடைக்கும் வெற்றிதான்.

— செல்வன் ரா சுரேஷ் கலஹா.

★

கால நேரம் அறிந்து பொருத்தமான நேரத்தில் பொருத்தமானவற்றை அலசி ஆராய்ந்து சமுதாயத்தை விழிப்புணர்ச்சி பெறச் செய்யும் கட்டுரைகளைத் தருவதில் முஸாபிருக்கு நிகர் முஸாபிரே! அந்த வகையில் கடந்த வாரம் முஸாபிர் தந்த கட்டுரையைப் படித்த உலமாக்கள் ஒருகணம் குழம்பி இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு முஸாபிர் பார்வை என்ற போர்வையில் முஸ்லிம் சமுதாயத்தின் குறை நிறைகளை சுட்டிக்காட்டும் "சிந்து" அச்சமூகத்தின் காலக் கண்ணாடியாக விளங்குகின்றது என்றால் மிகையாகாது!

— நுஃமான் முஹம்மட் வரக்காமுறை.

★

ஞாயிறு தோறும் 2 மணி நேரம் தமிழ் ஒளிபரப்பு தேவை என்று குரல் எழுப்பி இருக்கிறார் புடைவைக் கைத்தொழில் அமைச்சர் திரு தொண்டமானின் உதவியோடு அவரது அந்தரங்கச் செயலர் திரு பா திருநாவுக்கரசு இந்தச் செய்தியை கடந்த வாரச் சிந்தாமணி ஒலி ஒளி உருவப் பகுதியில் பார்த்தோம்.

தமிழ் டி வி ரசிகர்களின் சார்பில் இந்த நியாயமான கோரிக்கையை விடுத்த திரு திருநாவுக்கரசுவை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இரவு 10 மணிக்கு கண்விழித்து படம் பார்க்கும் வேதனையைத் தவிர்த்து ஞாயிறு பகல் வேளையில் படம் காட்டினால் அது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

...கள்! உங்கள் ...க்கும் வாசகர் எம் சிந்தனைக்கும் ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. ஏனெனில் முஸ்லிம் சமுதாயத்தின் முதுகெலும்புகளாகிய உலமாக்கள் அண்மைக் காலங்களில் என் போன்றவர் மத்தியிலே ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். இதை நீங்கள் சென்ற வாரம் "சமுதாயத்தை உலமாக்கள் குழப்பலாமா...?" என்ற தலைப்பில் வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருந்தீர்கள். உங்களுக்கும் சிந்துவுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

— எம் எல் எம் ராஸிக், வரக்காமுறை

★

மலையகக் ... கதாநாயகனாக விளங்கும் அமைச்சர் தொண்டாவை தெரியாதவர்கள் இருக்கவே முடியாது. அந்த அளவுக்கு மக்கள் மனதில் பிரபல்யம் பெற்று நீங்கா இடத்தைப் பிடித்து விட்டார். அவரின் 50 ஆண்டு சேவையை கொண்டாடு முகமாக அவர் ஆற்றிய சேவையின் ஒரு பகுதியை சிந்து தந்த விதம் மகிழ்ச்சிக்குரியது.

— சப்லி பெ யோகநாதன், வவ்வாப்பிட்டி ...டேட்.

★

அமைச்சர் தொண்டமானைப் பற்றி தொழிலதிபர் திரு ஈஸ்வரன் அளித்த ரசமான பேட்டியைக் கடந்த வாரச் சிந்துவில் படித்து பெரு மகிழ்வடைந்தோம். நல்லதொரு பேட்டிக் கட்டுரை இது.

அது சரி ஆசிரியரே. இந்தக் கட்டுரைக்கு அடிமை விலங்கு அறுத்த அடலேறு தொண்டமான் என்று தலைப்பு கொடுத்திருந்தீர்கள். அடலேறு என்ற புதுமையான அடைமொழி எங்களுக்குப் புரியவில்லை. தயவு செய்து விளங்குவீர்களா?

— கே சாத்தப்பன், நுவரெலியா.

குறிப்பு:

அடல் என்றால் போர். ஏறு

...காணவில்லை ... வார "பூலோக சஞ்சாரம்" பகுதியில் எஸ் எஸ் எஸ் அருமையாக விளக்கினார்.

— ஐ ஹுமாயுன் கபீர், மாதிப்பொளை

★

"மலிலனைய மங்கை" என்ற முகப்புக் கவிதை எழுதிய மர்மக் கவிஞரின் கையைப் பிடித்துக் குலுக்க வேண்டும் போல் இருக்கிறது.

— ஜெ மோகன் குமரன் ஹட்டன்.

குறிப்பு:

குலுக்கலாம் தான். ஆனால் கவிஞர் படு சோகத்தில் அல்லவா இருக்கிறார்? வானத்து நட்சத்திரத்தைப் பொடியாக்கி வைரக் கல்லின் தூளுடன் தங்கக் கிண்ணத்தில் கலந்து குழம்பு செய்து மினுங்கும் வண்ணம் முகத்தில் பூசியிருந்தாள் அந்த மயில் என்ற பொருள்பட அதாவது, "குழம்பு செய்து வதனம் மின்ன" என்று எழுதிக் கொடுக்க வதனம் என்ற சொல் விதனம் என்றல்லவா அச்சிடப்பட்டு விட்டது கவிதையில்? பாவம் முகப்புக் கவிஞர்! விதனத்துக்கு இன்னும் விசனத்துடன் பொருள் தேடிக் கொண்டிருக்கிறார்.

ஆ—ர்.

★

ஒலி ஒளி உருவத்தில் திரு தொண்டமானின் அந்தரங்கச் செயலாளர் திரு பா திருநாவுக்கரசு விடுத்த ஞாயிறு 2 மணி நேரம் தமிழ் ஒளிபரப்பு வேண்டுகோளைப் பற்றிய செய்தியைப் படித்தோம். ஞாயிறு ஒளிபரப்பை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்.

அன்று நடந்த தமிழ் ஒளிபரப்பு சம்பந்தமான மாநாட்டு நிகழ்ச்சிகளை அழகாகத் தந்த சிந்தாமணிக்கு நன்றி. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஒலி ஒளி உருவப் பகுதி ஆசிரியர் அழைக்கப்பட்டிருந்தது டி வி ரசிகர்களாகிய எமக்குப்


## ஷிஹான் கேட்டரர்ஸ்

திருமண வைபவங்கள், வரவேற்பு உபசாரங்கள், விருந்து வைபவங்கள் மற்றும் பார்ட்டிகளுக்கு சுவைமிக்க உணவுகள், வைபவங்கள் நடைபெறும் இடங்களிலேயே கொண்டு வந்து விநியோகிக்கப்படும்-

சஹ்ரான் புரியாணி (ஆறு பேருக்கு போதுமானது) ஒன்றின் விலை 325/- ரூபா மட்டுமே. அத்துடன் சுவையான ஏழு கறிகளும் வழங்கப்படும்- சம்பா, பாஸ்மதி மற்றும் சீரக சம்பா அரிசியால் தயாரிக்கப்பட்டவை-

தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்-

**யூசுப் அன்ட் சன்ஸ்**

96, ஹல்ஸ்டோப் வீதி;
கொழும்பு-12
தொலைபேசி இலக்கம்- 549567, 26358, 23892



# உம்ரா யாத்திரை 1990

## (புனித ரமழானில்)

இன்ஷா அல்லாஹ் இவ்வருடமும் புனித றமழான் மாதத்தில் அல்லது அதன் கடைசி பாதியில் தங்கள் கடமைமிகு நோன்பு நாட்களை திருக்கஃபா ஷரீபில் கழிக்க விரும்புவோர் வசதி கருதி எங்கள் நிறுவனம் ஏற்பாடுகள் செய்துள்ளது-

இக்குழுக்களில் சேர விரும்புவோர் உடனடியாக எங்கள் முகவர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்-

**அல்ஹாஜ் றிஸ்வி ஜுனைதீன்**

**Rifaz Travels And Tours**

6, Duke Street, Colombo — 1
Fort,
T'Phone 421330
(Times Building)

# தபசு நாட்கள் இறைவனால் தரப்பட்டது எதற்காக ?

— எஸ். டியான் செல்வமலர் —

## கிறிஸ்தவ நற்பிரசாதம்.

இயேசு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவுடன பரிசுத்தாவியினால் நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திருமபி ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டு நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார் என்று லூக்கா 4 ஆம அதிகாரம 1–2 வசனங்களில் வாசிக்கிறோம்–

இந்நாட்களை திருச்சபையானது தபசு நாட்களாக அனுசரித்து வருகிறது–

மானிடர்களாகிய யாவரிலும காணப்படும குறைபாடு என்னவெனில் தபசு நாட்களை சடங்காசாரமாகவும இயேசு 40 நாட்கள் உபவாசித்தார்... நாமும இருப்போம என்றும சிலர் பரமபரையாக எமது மூதாதையர் அனுசரித்துள்ளனர்–

நாம அனுசரிக்காவிடின் கடவுள் தண்டிப்பார் என்னும பிழையான நோக்கமுடையவர்களாய் பரிசேயர் சதுசேயர் போன்று இல்லாத சட்ட திட்டங்களை வைத்து இந்நாட்களில் சிலர் உணவு உண்ண மாட்டார்கள்–

சிலர் மதுவருந்துதல் விபசாரம களவு பொய் போன்ற தீய கொடும செயல்களில் ஈடுபாடு உள்ளவர்கள் அவைகளை விட்டு விடுவார்கள்–

இயேசு நாற்பது நாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார்– அந்நாட்களில் அவர் ஒன்றும புசியாதிருந்தார்– அந்நாட்கள் முடிந்த பின்பு அவருக்கு பசியுண்டாயிற்று–

அப்பொழுது பிசாசு அவரை நோக்கி நீர் தேவனுடைய குமாரனேயாகில் இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும என்றான்...

அவர் பிரதியுத்திரமாக மனுசன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்–

கிறிஸ்தவர்களாகிய நாமும இந்நாட்களில் சரீர பசியுடையவர்களாய் இருக்கிறோம்... உபவாசத்தில் அல்லது தீய கொடும் செயல்களில் ஈடுபடாமல் இருப்போமானால் எப்போ அந்நாட்கள் முடியும என காத்திருப்போம...

முடிந்ததும மீண்டும ஈடுபடுவோம– இந்நாட்களில் வேதாகமத்தை வாசிப்போமானால் எமமை நாம பல துஷ்டகாரியங்களில் இருந்து விலக்கிக் கொள்ளலாம...

ஆம்... தேவனுடைய வசனம் எமமை தீய செயல்களிலிருந்து எமமை விலக்கிக் காப்பாற்றுகிறது– அது மட்டுமல்ல அறிவையும் ஞானத்தையும் தருகிறது–

119ஆம சங்கீதம 9–77 105 165ஆம வசனங்களில் பின்வருமாறு கூறப்படுகிறது—

"வாலிபன் தன்வழியை எதனால் சுத்தம செய்வான்... உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்கிறதினால் தானே நான் பிழைத்திருக்கும படிக்கு உமது இரக்கங்கள் எனக்குக் கிடைப்பதாக... உமமுடைய வேதம என் மனமகிழ்ச்சி உம்முடைய வசனம என் கால்களுக்கு தீபமும என் பாதைக்கு வெளிச்சமாய் இருக்கிறது–

இரண்டாவதாக வந்த சோதனையைப் பார்ப்போமானால் பிசாசு அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல இராச்சியங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து இவைகள் எல்லாவற்றின் மேலுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன் இவைகள் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது– எனக்கு இஷ்டமானது இவைகளைக் கொடுக்கிறேன்– நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம உமமுடையதாகும– என்று சொன்னான்...

இயேசு பிரதியுத்திரமாக எனக்குப் பின்னாகப்போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்...

நாமும இந்தத் தபசு நாட்களில் ஈடுபடுமபோது பிசாசானவன் எமக்குக் கொடிய நோய்களைத் தந்தோ அல்லது வேதனைகளை கஷ்டங்களைத் தந்தோ எமமை அறியாமலே அந்நிய தெய்வங்களிடத்தில் கொண்டு செல்லலாம–

நாமும வேதனைகளைத் தாங்காத மக்களையோ அந்நிய தெய்வங்களையோ நாடுகிறோம...

தேவனிடத்தில் நமபிக்கையற்றவர்களாய் மாறிவிடுகிறோம பத்துக் கற்பனைகளிலே முதலாம கற்பனை உன் தேவனாகிய கர்த்தர் நானே என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம நீ அவைகளை நமஸ்கரிக்கவும சேவிக்கவும வேண்டாம என்பதாகும...

மூன்றாவதாக வந்த சோதனையை நோக்குவோமாயின் பிசாசானவன் அவரை எருசலேமுக்குக் கொண்டு போய் தேவாயத்த உப்பரிகையின் மேல் நிறுத்தி தேவனுடைய குமாரனேயாகில் இங்கேயிருந்து தாழக் குதியும ஏனெனில் உமமை காக்கும்படிக்குத் தமமுடைய தூதர்களுக்கு உமமைக் குறித்து கட்டளையிடுவார் என்றும உமபாதம கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உமமைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்றும எழுதியிருக்கிறது என்று சொன்னார்கள்

அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே என்றார்–

கிறிஸ்தவர்களாகிய நாம கூட இந்நாட்களில் தேவனைப் பரீட்சை பார்க்கிறவர்களாய் இருக்கிறோம–

என் தேவையை நிறைவேற்றும நான் உபவாசம இருப்பேன்... சிலர் நான் பரீட்சையை சித்தியடையச் செய்தால் என் கெட்ட காரியங்களை விட்டு விடுவேன் என்றெல்லாம மன்றாடுகின்றனர்...

"இசைத்துறையில் இவ்வளவு தூரம ஈடுபாடும புகழும பெற்ற நீங்கள், வயது சென்று கொண்டிருந்தாலும கூட, பல கூட்டங்களிலே இன்றும கூட இனிய குரலிலே பாடி வருகிறீர்கள். இந்தப் பேட்டியைத் தொடங்குவதற்கு முன்னர் ஒரு இறைவணக்கப் பாடலைப் பாடுவீர்களா?" என்பது தான் அந்தக் கேள்வி.

பெண்களின் வயதைக் கேட்கக்கூடாது என்பது ஓர் இங்கிதம், தங்களுக்கு வயது போய்க் கொண்டிருக்கிறது என்பதைச் சூசகமாகச் சுட்டிக்காட்டுவதைக் கூட எந்தப் பெண்ணும விருமபுவதில்லை. இந்த நுணுக்கம ஏன்

செய்தது. அவர் மூன்று ருத்ர வீணைகள் வைத்திருந்தாராம. அவர் வீடு 1983 ஆம ஆண்டு கலவரத்தின் போது தீயிட்டுக் கொளுத்தப்பட்டது— அந்த மூன்று வீணைகளும எரிந்து சாமபராகி விட்டன என்றார் பாலாமபிகை,

பாலாமபிகை எழுதிய முதல் வானொலி நாடகத்தின் பெயர் "காலச்சக்கரம". காலச்சக்கரம என்று எழுத ஆரமபித்தவரின் வாழ்க்கையும சுழன்று

ஒன்று மட்டும சொல்லுவோம. பாலாம்பிகையிடம சொல்வதற்கு இன்னும எவ்வளவோ கருத்துக்களும, அனுபவங்களும உள்ளன என்பதை அப் பேட்டியின் போது அநுமானிக்க முடிந்தது. அதனால், தொடர்ந்து இன்னுமொரு பேட்டியை அவரிடம பெற்று ஒலிபரப்பினால் என்ன? சற்சொரூபவதி இதைக் கருத்தில் கொள்வாரா?

— சஞ்ஜயன்

## 13 ஆவது கட்டில் ஹாஸ்ய நாடகம்

இலங்கை வானொலி முஸ்லிம நிகழ்ச்சியில் செவ்வாய்க்கிழமைகளில் தரமான நாடகங்களை ஒலிபரப்பி வருகிறார்கள்— பெப்ரவரி 27 ஆம திகதி ரேடியோவைத் திருப்பிய போது "13 ஆவது கட்டில்" என்ற ஒரு ஹாஸ்ய நாடகத்தைக் கேட்க முடிந்தது—

சாதாரண நாடகங்களை நடத்துவதை விட ஹாஸ்ய நாடகங்களை எழுதுவதும நெறிப்படுத்துவதும வெகு சிரம சாத்தியமான காரியமாகும— இந்த சிரமமான காரியத்தில் அன்று பெரு வெற்றி காணப்பட்டது—




"13 ஆவது கட்டில்" என்ற நாடகத்தை மஹதி ஹஸன் இப்ராஹிம எழுதியிருந்தார்— அவரே அந்த நாடகத்தில் டாக்டராகவும நடித்தார்— மற்றும சில்மியா ஹாதி — ஓ நாகூர் எச் எம ஹுசைன் ஜெய் ரஹீம ஷகீத் ஆகியோர் முறையே டாக்டர் மனைவி — முதலாளி — சிப்பந்தி — சிப்பந்தியின் மனைவி ஆகிய பாத்திரங்களை ஏற்று நடித்தனர்—

அனைவரும அவரவர் பாத்திரத்தை உணர்ந்து அற்புதமாக நடித்தார்கள்— சில்மியா ஹாதியின் துடிப்பான வசன உச்சரிப்பு உள்ளத்தைத் தொட்டது— ஒவ்வொரு கட்டத்திலும ஒவ்வொரு திருப்பத்திலும நகைச் சுவை வெடித்துச் சிதறியது—

ஹாஸ்ய நாடகம என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும— ஐ டி என் ஒளிபரப்பில் ஒரு நாடகத்தை ஹாஸ்ய நாடகம என்று சொல்லி ஞாயிற்றுக்கிழமைகளில் கருத்தில்லாத ஒரு கூத்தைக் காட்டுக் கூச்சலாக ஒளிபரப்பி உயிரை வாங்குகிறார்களே— அவர்கள் இந்த "13 ஆவது கட்டில்" நாடகத்தைக் கேட்டிருக்க வேண்டும— கேட்டிருந்தால் ஹாஸ்ய நாடகம என்றால் எப்படி இருக்க வேண்டும அதில் எப்படி நடிக்க வேண்டும என்பதை அவர்கள் கற்றுக் கொண்டிருக்கலாம—

இந்த சிறந்த ஹாஸ்ய நாடகத்தை நெறிப்படுத்தித் தந்தவர் எம அஷ்ரப்கான்— அவரை எவ்வளவு பாராட்டினாலும தகும—



கடந்த பெப்ரவரி 3ஆம திகதி "சங்கமம்" நிகழ்ச்சியில் ஒளிபரப்பான பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவியரின் "கோசலை மைந்தன்" வில்லிசை நிகழ்ச்சியையே இங்கு காண்கிறீர்கள்—

## ஊரும் உலகமும் உவகை தருகிறது

கடந்த வியாழக்கிழமை விஸ்வநாதனின் விளக்கத்தில் வாஹினியில் ஒளிபரப்பான "ஊரும உலகமும" நிகழ்ச்சி பொது அறிவை வளர்க்கும ஒரு அருமையான விவரணச் சித்திரமாகும!

குறிப்பாக மாணவ மாணவிகள் தவறாது பார்த்துப் பயனடையக்கூடிய படிப்பினையூட்டும போதனைகளைக் கொண்ட சாதனைகளின் நிகழ்ச்சியிது!

காட்டெருமைக் கூட்டத்தைக் ஹெலிக்கொப்டர் மூலம கட்டுப்படுத்துதல்...

ராட்சத தொலை நோக்கிக் கருவிகளின் ஆற்றல்...

கடல் ஆமைகளை ஆழ்கடலில் பிடித்தல்...

சூரிய சக்தி அடுப்பு மூலம சமைத்தல்... போன்ற பல சமபவங்களை உள்ளடக்கிய உலக நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும உள்ளங்களை உவகையிலாழ்த்தவே செய்யும!

நீங்கள் வேகமாகப் பேசினாலும சரி அல்லது மிக மெதுவாகப் பேசினாலும் சரி எதிரே உட்கார்ந்திருக்கும் எனௌன்ஸர் தவியாய்த் தவிப்பார்!

அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவர் ஒரு கடிதத்தில் மெதுவாக — வேகமாக என்று எழுதிக் கடிதத்தை உங்கள் முன் நீட்டுவார்— நீங்கள் படிக்கும முழுமுரத்தில் எதிரில் ஒரு ஆசாமி இருப்பதை அடியோடு மறந்து விடுவீர்கள்—

ஆகவே தவறிப் போய் அவர் இருப்பது ஞாபகத்துக்கு வந்து அவர் கடிதம் நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும "என்ன! மெதுவாகவா படிக்கணும?" என்று கேட்டு விடாதீர்கள்— கடிதத்தை மட்டும பார்த்து விட்டு அதில் சொல்லியிருக்கிறபடி செய்யுங்கள்—


உங்களுக்குக் கால் மணி அவகாசம கொடுக்கப்பட்டிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்— அப்புறம் என்ன செய்வது?

பாடகர்களாயிருந்தால் ஒரு தில்லானா பாடுவார்கள்— அதை அனுசரித்து நீங்களும ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து விடாதீர்கள்— அப்படிச் செய்வதற்கு ரேடியோக்காரர்கள் அனுமதிப்பதில்லை—

சில சமயம் ரேடியோ காரியாலயஸ்தர்கள் உங்களைப் பார்த்து ஒரு தினுஸாகச் சிரிப்பார்கள்— "பிரசங்கம் ரொம்ப பேஷாகயிருந்தது" என்று சொல்வார்கள்— அவர்கள் சொல்வதை அப்படியே நமபி விடாதீர்கள்— ஏனென்றால் அப்படிச் சொல்லி அவர்களுக்குப் பழக்கம—

உங்கள் பிரசங்கத்தைப் பற்றிய உண்மையான அபிப்பிராயம தெரிய வேண்டுமென்றால் நேரே வீட்டில் போய் உங்கள் சஹதர்மிணியைக் கேளுங்கள்—

# உறவு!



-கே. எஸ். வரலிங்கம்-

சின்னஞ் சிறுகதை

"ஏண்டி சுலோ இன்னிக்கு சுதன் வருவான் இல்லே" மரிக்கொழுந்த கேட்டாள்—

சுலோஜினியும மரிக்கொழுந்தும நெருங்கிய தோழிகள்— அச்சுதன் இவர்களோடு படித்தவன் படிப்பை பாதியிலேயே முடித்துக் கொண்டு பிறந்த ஊரை விட்டு விட்டு கொழும்புக்கு வந்துவிட்டான்

அச்சுதனை எல்லோரும் சுதன் என்றுதான் செல்லமாக அழைப்பார்கள்— அதேபோல் சுலோஜினியை சுலோ என்றும மரிக்கொழுந்தை கொழுந்து என்றும அழைப்பார்கள்—

வண்டியின் சக்கரங்கள் உருண்டோடுவது போல் நாட்கள் நகர்ந்த வருடங்கள் ஆறு உருண்டோடின—

சுலோஜினியும, மரிக்கொழுந்தும படிப்பை நிறுத்தி விடவில்லை— தொடர்ந்தும படித்துக் கொண்டிருந்தனர்— அதன் பலனாக இவர்களுக்கு மேல் படிப்பை தொடர கொழும்புக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது

சுதன் கொழும்பில் இருப்பது சுலோஜினிக்கோ, மரிக்கொழுந்துக்கோ தெரிந்திருக்க நியாயமில்லை—

எனினும எப்படியோ எதிர்பாராதவிதமாக சந்தித்து விட்டார்கள் சுதன் அன்று பள்ளியில் பழகியதைப் போலவே இன்றும எந்த வித்தியாசமும் இல்லாமல் அவர்களிடம பழகினான்—

"கொழும்பில் இருக்கிறவர் கொழுந்து கேட்டாள்—

ஏன் கொழும்பில் இருக்கிறவர்களுக்கு இதயம இல்லையோ? இப்படி கூறுகிறவர்கள் எல்லோரும நல்லவர்களாக இருப்பார்களா? என்பதே கேள்விக்குறிதான்—

"கொழும்புன்னு பெரிசா சொல்றாங்களே! அப்படி என்ன இருக்குது இங்க?"

"சுலோஜினியின் கேள்வி கொழும்பைச் சுற்றிக் காட்டத் தூண்டியது சுதனுக்கு—

வாரந்தோறும லீவு நாட்களை பயன்படுத்தி கொழும்பைச்சுற்றி காண்பித்தான் சுதன்,

வெகு நாட்களாக இல்லாத நட்புறவு சுலோஜினி மூலமும மரிக்கொழுந்து மூலமும கிடைத்ததில் ஏக மகிழ்ச்சி சுதனுக்கு—

கொழும்பிலுள்ள பழம்பலப்பிட்டி ரயில்வே ஸ்டேஷனில் தான் இவர்களது வாராந்த சந்திப்பு நடைபெற்று வந்தது—

ஊரை விட்டு படிக்க வந்தவர்கள் மகிழ்ச்சியோடு திரும்ப வேண்டும என்பதற்காக சுதன் நகைச்சுவையாகப் பேசி அவர்களை மகிழ வைத்துவந்தான்

குருவிகளின் உவகை ஊருபளாய் மாமிகளினதும ஊருபலாய் மாமாக்களினதும் கண்களை உறுத்தத் தொடங்கின—

எனவே இப்போது சமூகம அவர்களை வித்தியாசமாகப் பார்க்கத் தொடங்கியது— இது சுலோஜினியின் காதுக்கு எட்டவே அவள் கலங்கினாள்—

சகோதர பாசத்துடன் பழகும் ஒரு உத்தமன் மேல பழிச் சொல்லா? இதுதான் உலகமா? இதுதான் சமூகமா?

அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை— இந்த அவலச் செய்தியை சுதனிடம சொல்ல தயங்கினாள்—

மரிக்கொழுந்திடம் சொன்னாள்—

"சுதன் வருவதை எப்படியாவது நிறுத்த வேண்டும என்ன வழி?"

"வந்தால் முகம் கொடுத்துப் பேசாமல் இருந்தால் அவரே போய்விடுவார்!" மரிக்கொழுந்தின் யோசனை இது—

"வேற வழியே இல்லையடி" சுதன் வந்தால் அலட்சியப்படுத்தி விடுவதென்று முடிவுகட்டிவிட்டார்கள்—

"இவ்வளவு நேரமா உங்களுக்காக வெயிட் பண்ணினதை விட இந்த ரயிலிலேயே தலை கொடுத்திருக்கலாம்!" எப்போதும போலவே இன்று லாகச் சொன்னான் சுதன்

"கொடுத்திருக்கலாமே" என்றாள் சுலோஜினி—

"ஏன்! இந்த உலகத்துல இது மரிக்கொழுந்து—

சுலோஜினியும, மரிக்கொழுந்தும வார்த்தைக்கு வார்த்தை முரண்பாடாகவே பேசினார்கள்

அன்பு வார்த்தைகளை அள்ளி வீசுவார்கள் என்று புள்ளிமானை போல துள்ளி வந்த சுதனுக்கு பெருத்த ஏமாற்றம்!

"ஏன் இப்படி வெறுத்துப் பேசறீங்க?" சுதன் கேட்டான்

பதிலும இல்லை— சரியாக முகம் காட்டவும இல்லை—

"அப்ப நான் இந்த ரயில்லை குடுக்கிறதில் தப்பே இல்லை" என்றான்—

"ஓ...யார் வேண்டாங்கிறா?" இருவருமே சொல்ல சுதன் திரும்பினான்—

சுலோவும, கொழுந்தும, அலட்சியமாக தலையை அசைத்து நடந்தார்கள்—

துக்கம தாளாமல் நின்ற சுதனுக்கு என்ன தோன்றியதோ வேகமாக வந்த ரயிலின் முன் பாய்ந்தான்— "அ...அ!" பயங்கரமான அலறல் சப்தம—

சுலோஜினியும, மரிக்கொழுந்தும இதை எதிர்பார்க்கவில்லை சமுதாய ஏசல்களுக்குப் பயந்து சமுதாயத்தின் இராட்சத கண்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இப்படி ஒரு வழியை வகுத்ததால் நல்ல உள்ளம் ஒன்று இன்று உயிரையே துறக்கவிட முடிவு செய்தது உள்ளம

இதனை எண்ணி சுலோஜினியும, மரிக்கொழுந்தும கலங்கி விட்டனர்— அச்சரியமாக உயிர் தப்பிய சுதனை அக்கம்பக்கத்தில் உள்ளவர்களின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்—

அங்கு டாக்டர் மேற்கொண்ட பெரும் முயற்சியினாலும அவனின் தியாகசிந்தையாலும அந்த நல்ல உள்ளம ஆபரேஷன் ஒன்றின் மூலம உயிர் பிழைத்தது—

அபரேஷன் முடிந்து மயக்க நிலையில் கட்டிலில் படுத்திருந்த சுதன் கண் விழித்து பார்த்த போது அருகே கன்னருகே சுலோஜினியும, மரிக்கொழுந்தும இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான்—

கலங்கிய விழிகளுடன் நின்ற சுலோஜினியையும் மரிக்கொழுந்தையும தன்னருகே அழைத்த சுதன் சகோதரர்களாக பழகுவதை சமுதாயம மதிக்காமல் போனாலும் நம் உறவு மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையட்டும் இனி நாம நடப்போம—

இவன் மூலமாவது நமது சமுதாயத்தின் கண்ணோட்டம மாறுகின்றதா? என்று பார்ப்போம— என்ற ஜோடி விழிகளிலிருந்தும பொங்கியெடுத்த நீர்

# நகைச்சுவை மஞ்சரி

"இன்னைக்கு எங்க வேலைக்காரம்மா வரலை... அதனால...!"

"அதனால எங்க வேலைக்காரம்மாவை அனுப்பி வேலை செய்யச் சொல்லட்டுமா...!"

"அதெல்லாம வேண்டாம. ஏதாவது மெயின் நியூஸ் மட்டும இருந்தா சொல்லிட்டுப் போவச் சொல்லு..."

☆

"நம கூட கல்லூரியில் படிக்கும பெண்களை தங்கைகளாக நினைக்கணுமனு நமப



லெக்சரர் அடிக்கடி சொல்றாரே, ஏன்?"


"அவருடைய மூணு பெண்களும நமப கல்லூரியில்தானே படிக்கறாங்க..."

★

"ஏன் டாக்டர்! கொசு கடிச்சா யானைக்காலு வருமனு சொல்றீங்களே... அதே மாதிரி யானை கடிச்சா கொசு காலு வருமா?"

★

"அதோ போறாரே... அவர் இரண்டு படத்துல தொடர்ந்து டாக்டரா நடிச்சார்!"



"சரி இப்போ...!"

"சொந்தத்துலேயே ஒரு கிளினிக் ஆரமபிச்சு ஓகோனு இருக்கார்!"

★

"அந்த ரெண்டு மாஜி மந்திரியும ரகசியமா என்ன பேசிக்கறாங்க?"

"ஒண்ணுமில்லே! நேத்து தன்னோட கட்சியிலேர்ந்து விலகி வேற கட்சியிலே சேர்ந்தாங்களாம. ஆனா எந்தக் கட்சின்னு மறந்து போச்சாம."

★

"நேத்து ஹோட்டல்ல சாப்பிட்டு பில்லுக்கு பணம கொடுக்க பார்த்தா பையில இருந்த பத்து ரூபா நோட்டை காணோம..."

"அப்ப மாவரைச்சியா?"

"இல்ல. இருபது ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்தேன்?"

★

"ஏங்க கல்யாணப் பந்தல் கிட்ட ஒரே கூச்சலும குழப்பமா இருக்கு?"

"அது ஒண்ணுமில்லீங்க! ஹோமப் புகைல கண்ணு தெரியாம புரோகிதர் கழுத்தில மாப்பிள்ளை தாலியைக் கட்டிட்டாராம."



"நேத்து அவசரமா பணம தேவைப்பட்டதுன்னு சேட்டுகிட்ட போய் கத்தியைக் காட்டினேன்!"

"என்ன பயந்துபோய் எல்லாத்தையும தூக்கிக் கொடுத்திட்டானா?"

"அட நீ வேற! இரும்புக் கத்திக்கெல்லாம பணம தர்றதில்லை. பித்தளை, வெள்ளியிலே ஏதாவது இருந்தால் எடுத்திட்டு வான்னு சொல்லிட்டான்...!"

★

"பல் டாக்டர்கிட்ட சொத்தை பல்லை புடுங்கிக்கிட்டு வரேன்னு போயி ஏன் திருமபி வந்துட்டீங்க...?"

ஒரு பல் புடுங்க 15 ரூபாவாம, இரண்டு பல் புடுங்க 25 ரூபாவாம. இன்னொரு பல் கூட சொத்தை ஆனா பிறகு புடுங்கிட்டா லாபமாச்சேன்னு வந்துட்டேன்!."

# பாசத்தை மறக்க வைத்த எயிட்ஸ்

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த 26 வயது மாணவன் ஒருவன் தன் பெற்றோர்களின் படுக்கை அறைக்குள் இரவு நுழைந்து அவர்களைக் கண்டபடி தாக்கினான்—

தந்தை கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்—

அந்த மாணவன் தற்கொலை செய்ய முயற்சித்த பொழுது பிடிபட்டான்—

இருந்ததால் அது தனக்கும தொற்றிக் கொண்ட விவரம கேள்விப்பட்டவுடன் தன் பெற்றோர்களைக் கொன்று விட முடிவெடுத்ததாக பொலீஸாரிடம சொன்னான் அந்தப் பிள்

எந்த வித்தியாசமுமே இல்லாமல் அவர்களிடம பழகினான்–
"கொழும்பில் இருக்கிறவர்களை எல்லாம நமபக் கூடாத என்று கூறுவார்களா? மரிக்

வேண்டும என்பதற்காக சுதன் நகைச்சுவையாகப் பேசி அவர்களை மகிழ வைத்தவந்தான் உரிமையோடு உல்லாசமாக சுற்றித் திரியும இந்த ஊர்க்

"கொடுத்திருக்கலாமே" என் றாள் சுலோசினி–
"ஏன்! இந்த உலகத்தல நீஙக ஒருத்தன் செத்தா உல கமே அழிஞ்சு போயிடுமோ?"

போம– என்ற ரோடி விழிகளிலிருந்து பொஙகியெடுத்த நீர் ஒன்றாக சஙகமமாகின–
(த–இ)

படுக்கை அறைக்குள் இரவு நுழைந்த அவர்களைக் கண்டபடி தாக்கினான்–
அவனுடைய தாய் அதே இடத்தில் மரணமடைந்தாள்–

அந்த மாணவன் தற்கொலை செய்ய முயற்சித்த பொழுது பிடிபட்டான்–
பொலீஸார் அவனை அழைத்துச் சென்று விசாரித்தனர்– தன் தந்தை தாய்க்கு எயிட்ஸ் நோய்

றோர்களைக் கொன்று விட முடிவெடுத்ததாக பொலீஸாரிடம சொன்னான் அந்தப் பிள்ளையாண்டான்!
(த—10)

# மொட்டை வீடு!

கு. வாசுகி

சவூதியிலிருந்து சீதாராமன் ஊருக்கு வந்து சேர்ந்தான்–
மூன்று வருடஙகளுக்குப் பிறகு வளவிற்குள் காலடி எடுத்த வைத்ததும அவனுக்கு நெஞ்சுக்குள் "திக்" கென்றது–

அமமா, அப்பா, அண்ணன், தமபி எல்லோருமே தலைவிரி கோலமாக நின்று அவனை வரவேற்றார்கள்–
வேடுவர்கள் வசிக்கும இடத்திற்கு வந்து விட்டோமா? என் சந்தேகம எழுந்து அவனை என்னவோ செய்தது–
கையிலிருந்த பொதிகளை முற்றத்தில் போட்டுவிட்டு "இதென்ன உஙகள் கோலம" உஙகளுக்கு என்னதான் நடந்தது? என்று கேட்டான்–
அண்ணன் லாவகமாக பின்னால் தொஙகிய மயிரை கோதி, கொண்டை போட்டுக் கொண்டு "இனிமேல் இததான் ஸ்டைல்!" என்றான்.
குட்டித் தமபி யார் வந்திருக்கிறது அண்ணா எஙகே பார்ப்போம!" என்றபடி கண்களை மறைத்துக் கொண்டு தொஙகிய தலைமயிரை விலக்கி அண்ணாந்து பார்த்துச் சிரித்தான்–

அப்பா, ரூபவாஹினியில் "ஷாமபோ" விளமபரக்காரியைப் போல் முடிமயிரை ஒரு தரக்குத் தூக்கிச் சிலிர்ப்பி விட்டபடி "பழைய காலம திருமபி விட்டது மகனே!" என்றார்–

சீதாராமனுக்குச் சகிக்க முடியவில்லை– "இனிமேல் ஊரிலுள்ள பேன், ஈரெல்லாம இஙகேதான் குடியேறப் போகிறது" என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டு தாயைப் பார்த்த "அமமா இதென்னமமா இவர்களின் கோலம? கதிர்காமச் சீசனில் காணும சாமிமாராட்டம–

நமம நாட்டில் சலூனே கிடையாதா! நமம முடிவெட்டும செபமாலை செத்தா போய்விட்டான்?" என்று கேட்டதும சீதாராமனின் தாய் சொன்னாள்–
"மகனே சீதாராமா முடிவெட்ட இப்போது தலைக்கு பத்துப் பதினைந்து எடுக்கிறார்கள்– அப்பாவும, அண்ணனும, தமபியும முடிவெட்ட "சேவ்" செய்ய கிட்டத்தட்ட அறுபது ரூபாவுக்கு மேல் வேண்டும–
அதனால் முடிவெட்டுவதை நிறுத்திக் கொள்ளுமபடி நான் தான் சொன்னேன்!"
"என்னமமா இத முடிவெட்ட இப்போத அவ்வளவு றேற்றா? அபச்சாரம! அபச்சாரம–
எல்லோரும சாமிக் கோலத்தில் நிற்கின்றபடியால் சீதாராமனுக்கு இப்படிச் சொல்லவே வாய்வந்தது–
எல்லோரும எல்லாத் தொழிலையும செய்யக் கற்றுக் கொண்டால் எஙகுமே எந்தப் பிரச்சினையுமே எழாது– சவூதியிலே நாஙகெல்லாம அவரவர் முடிகளை அவரவரே வெட்டிக் கொள்கிறோம!"
இப்படி சீதாராமன் சொன்னதும அவன் தாய் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டுக் கேட்டாள்–



"மகனே நீ வெளிநாட்டில் முடிவெட்டித்தான் சமபாதிக்கிறாயா?"

"ஏன்? அதுவும ஒரு தொழில் தானே அமமா முடிவெட்டுவது பெரிய வேலையில்லை! வெளிநாட்டில் அவரவரே அவரவர்கள் முடிகளை வெட்டப் பழகியிருக்கிறார்கள்–

வேண்டுமென்றால் என் கைவண்ணத்தை இப்போத நீஙகளே பாருஙகளன் அப்பா, அண்ணா, தமபி இப்படி முற்றத்தில் எல்லோரும கதிரைகளைத் தூக்கிக் கொண்டுவந்த போட்டு அமருஙகள்! ஒரு நொடியில் வெட்டித் தள்ளி விடுகிறேன்– சீதாராமன் அவனுடைய "பேக்கை"த் திறந்து கத்தரிக்கோல் கத்திகளை எடுத்தான்–
அதைப் பார்த்ததும அவன் தாயார் பதறிப் போனாள்–
"மகனே சீதா–ராமா இப்போததான் சவூதியிலிருந்து நீ வந்திருக்கிறாய் வந்ததும வராததுமாக தலை வெட்டி... கொலை செய்து... கொஞ்சம ஆற அமர இருந்த யோசிச்சுப் பார்மனே"
"அமமா நீஙகள் ஏன் பயப்படுகிறீர்கள்? இருந்து பாருஙகளன் இப்ப புதினத்த!" ஆயிற்று சீதாராமன் முடிவெட்டத் தயாரானான்–
அப்பா, அண்ணன், தமபி மூவரும முற்றத்தில் கதிரைகளை இழுத்துப் போட்டு அமர்ந்து கொண்டார்கள்–
அரைமணி நேரத்தில் மூவருக்கும சீதாராமன் முடிவெட்டி முடித்ததும, எல்லோரும ஓடிப்போய் நிலைக்கண்ணாடியின் முன் நின்று அழகு பார்த்தார்கள்–
அவரவர்களுக்கே அவரவர்களை அடையாளம காண முடியாதிருந்தது– கண்ணாடியின் முன்னால் நின்று அழகு பார்த்த கணவனைக் கண்டதும மனைவி வீரிட்டே கத்திவிட்டாள்–

கமுபளிப் பூச்சு மேய்ந்த பூவரசம இலையைப் போலவும மாறு சூப்பிய பனம பழம போலவும ஆடுகடித்த செவ்வரத்தம செடி போலவும மூவரத தலைகளும காட்சியளித்தன–
இனி என்ன செய்வது? சலூனுக்குப் போனால் சலூன்காரனும ஒப்பெடுக்க மாட்டான்! முக்காடு போட்டுத்தான் தெருவில் இறஙகி நடக்க வேண்டும–
தாய் மகன் சீதா–ராமனை ஆத்திரத்தோடு பார்த்தாள்– அவன் ஒன்றும பேசாமல் திருமபவும மூவரையும பழையபடி கதிரைகளில் அமர வைத்து தலைகளை நாறத்தஙகாய்களாக்கி விட்டு நிமிர்ந்தான்!
புதிதாக மொட்டையடித்த மூவரும ஹொலிவூட் நடிகைகளைப் போல சீதா ராமனைப் பார்த்துச் சிரித்தார்கள்–
(த)





# மனையும் மங்கையும்

## வீட்டுப் பிரச்சினைகளை எப்போது ஆராயலாம்?

### அலுவலகத்திலிருந்து கணவன் வீடு திரும்பும் நேரத்தில் அல்ல

— ஏ. எஸ். ஜெளஸிபா —

ஒரு இல்லத்தரசியின் முக்கிய பணி இல்லத்தலைவனுடைய கடமைகளை நிறைவேற்றுவதாகும்— அதிலும் கணவனுடைய உடல் நலனில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது மனைவியின் கடமையாகும்—

கணவன் இளமையோடு ஆரோக்கியமாக இருக்கவும், நீண்ட ஆயுளைப் பெறவும் மனைவி கடைப்பிடிக்க வேண்டிய சில ஆலோசனைகள் இதோ—

உங்கள் கணவர் பருமனாக இருந்தால், அவர் உண்ணும் உணவு விஷயத்தில் கவனத்தைச் செலுத்துங்கள் அதிக "கலோரி" உள்ள உணவுவகைகளைக் குறைத்து, அதற்குப் பதிலாகக் குறைந்த கலோரி உள்ள உணவுவகைகளை உண்ணச் செய்யுங்கள்—

இந்தத் திடீர் மாற்றத்தை கணவர் அறியாத முறையில் மேற்கொள்வது உங்கள் திறமையில் தான் தங்கியுள்ளது—

அதிகக் கொழுப்புச் சத்துள்ள உணவு வகைகளை சாப்பிடாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்— ஆனால் எண்ணெய் சேர்த்து சமைக்காத உணவு உங்கள் கணவருக்குப் பிடிக்காவிட்டால், கொழுப்புச் சத்துக் குறைவாக உள்ள எண்ணெய்யை உணவு வகைகளை சமைக்கப் பயன்படுத்துங்கள்—

புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல் போன்ற கூடாத பழக்கங்களை உங்கள் கணவரிடமிருந்து சிறிது சிறிதாக மாற்றுவதற்கு (குறைப்பதற்கு) முயற்சி செய்யுங்கள்— இதன் மூலம்பெரிய நோய்கள் ஏற்படாமல் உங்களால் தடுக்க முடியும்—

ஆபிஸிலிருந்து களைப்புடன் வீடு திரும்பும் கணவரிடம் வீட்டுக்கவலைகளை முறையிட்டு அவர் உள்ளத்தை வேதனையடையச் செய்யாதீர்கள்— எந்த விடயத்தையும் ஆறுதலாகச் சொல்லி சிறந்த தீர்வுகாண பெண்மைக்குரிய பொறுமையுடன் இருங்கள்—

உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் சோர்ந்து போய் தூக்கத்தில் கழிக்காமல் சுறுசுறுப்பாக கணவருடன் ஏதாவது விளையாட்டில் ஈடுபடுங்கள்— விளையாட்டு மனதுக்குப் புத்துணர்ச்சி அளிப்பதுடன் உடலின் இயக்கத்திற்கும் சிறந்த வலுவையும் உற்சாகத்தையும் கொடுக்கும்—

கணவருக்கு ஏற்படும் நோய்களுக்கு உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுங்கள். தொற்று நோய்கள் என்றாலும் பிறருக்கு அது பரவு முன்னர் மருத்துவ ஆலோசனை மூலம் தடுக்கலாமல்லவா?

உங்கள் கணவர் அடிக்கடி மது குடிப்பவராக இருந்தால் அப்பழக்கத்தை கொஞ்சம் குறைக்கும்படி ஆலோசனை கூறுங்கள் இல்லையெனில் அப்பழக்கம் காலப் போக்கில் இருதயத்தைப் பாதிக்குமென்று முன்னெச்சரிக்கை செய்து வையுங்கள்—

இந்த ஆலோசனைகளை ஏற்று நீங்கள் செயற்படுத்தும் போது உங்கள் இல்லறப் பூங்கா இன்பத்தில் மிதக்கும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கேற்ப இனி வாழ்ந்து காட்டுங்களேன்!

## பிள்ளைகளை நன்கு வளர்க்க பணம் மட்டும் போதாது......!

உலகத்திலேயே பிரபல செல்வந்தரின் மகன் போல் கெட்டி, இவர் வாழ்க்கையில் எல்லாமிருந்தும் மன நிம்மதியில்லாமல் குருடனாகவும், செவிடனாகவும் மனநோயாளியாகவும் நான்கு சுவர்களுக்குள்ளே வாழ்ந்து வருகின்றார்,

பால்ய வயதிலேயே இவர் செல்லமாக வளர்க்கப்பட்டார், வயது வந்தபின், செல்வந்தர்களின் செருக்கிலே மது, மங்கை, போதைப் பொருள்களுக்கு அடிமையானார், மதுவை அளவில்லாமல் அருந்துவார், இதனால் அவருக்கு மாரடைப்பு வந்தது, அதன்பின் கண்பார்வை இழந்தார், பின் செவிடனாக மாறியுள்ளார்,

1973ஆம் ஆண்டு இவரை பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர், அப்பொழுது இவருக்கு வயது 16 ஐந்து மாதங்களாக இவர் பயங்கரவாதிகளின் சித்திரவதைக்கு உள்ளானார், பின்னர் பணயப் பணம் செலுத்தி விடுவிக்கப்பட்டார்,

தன்னை விட ஆறு வயது மூத்த பெண் ஒருத்தியை திருமணம் செய்தார், திருமணம் ஹிப்பிகள் மத்தியில் மதுவையும் போதை வஸ்துக்களையும், அதிகமாக பாவிக்கத் தொடங்கினார், இதனால் உடல் நிலைமை வெகுவாக பாதிக்கப்பட்டது, குடித்து வெறித்து உடல் வலிமை குன்றியது,

போல் கெட்டி கதைப்பதற்கு "கொம்பியூட்டர்" தேவைப்படுகிறது, இவரின் வீடு "பேர்வட்டன்" மலையில் உள்ள ஒரு பெரிய மாளிகை இது இப்பொழுது மருத்துவ மனையாக மாற்றப்பட்டுள்ளது, மற்றவர்களுக்கு மாளிகை இவருக்கு மருத்துவமனை,

இம்மருத்துவமனையில், நிபுணர்களுக்கு தேவையான உபகரணங்கள் அவ்வளவும் உள்ளன, அங்கே ஒரு இரத்த வங்கியும் உள்ளது,

பிள்ளைகளை நன்கு வளர்க்கப்பணம் இருந்தால் மட்டும் போதாது!

(ம—455)

## மரம் ஏறி தேங்காய் பிடுங்கும் தொழில் செய்யும் லீலாவதி

### ஆடவர் ஏகபோகம் வகித்த வேலை பெண்கள் வசம[illegible]து

சில பணிகள் பெண்களால் ஆகாது— ஆண்களால் மட்டுமே அவற்றை செய்து முடிக்க முடியும் என்று கருதப்படுவதை மேல் நாட்டுப் பெண்கள் விரும்புவதில்லை—

ஆண்களுக்கு மட்டும்தான் முடியும் என்பதெல்லாம் வெறும் கற்பனை— ஆண்களுக்கு முடியுமானால் பெண்களுக்கும் முடியும் என்றே அவர்கள் கருதுவதோடு அதைச் செயலிலும் காட்டி வருகிறார்கள்—

உதைபந்தாட்டம் — றகர் போன்ற முரட்டு விளையாட்டுகளில் ஈடுபட்டு வரும் மேல் நாட்டு நங்கையர் எடை தூக்கும் போட்டியிலும் வெற்றிகரமாக பிரவேசித்துள்ளனர்— ஆண்களுக்கு உருண்டு திரண்ட தசை வருமானால் எமக்கும் தசைத் திரட்சி வரும் என்பதையும் செயலில் அவர்கள் காட்டி விட்டார்கள்—

எமக்கு மட்டும்தான் வரும் என்று மார்தட்டி வந்த ஆண்களின் எல்லா ...

வேண்டும்— கல்லுடைக்க வேண்டும்— சைக்கிளை எடுத்துக் கொண்டு கிராம சாலைகளில் எல்லாம் சுற்றி வர வேண்டும் என்றுதான் லீலாவதிக்கு சதா தோன்றியது—

இவர் கிணறு வெட்டியிருக்கிறார்— வீடு கட்டும்போது எடுபிடியாக வேலை செய்திருக்கிறார்— வீடுகளுக்கு கூரை வேய்ந்திருக்கிறார்— மரமேறுவதைத் தொழிலாகக் கொண்டிருந்தாலும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் இந்தத் தொழில்களையும் செய்து வருகிறார், லீலாவதி—

கிணறு வெட்டுவதுதான் இவருக்கு மிகப் பிடித்த வேலையாம்— கிணறு வெட்டியபடி கீழே கீழே

(24ஆம் பக்கம் பார்க்க)



## குழந்தைகளின் உருவ

# குழந்தைகளின் உருவ அமைப்பில் மாற்றம்

"பாடசாலையும, குழந்தைகளின் ஆரோக்கியமும" என்ற பிரச்சினையை விவாதிப்பதற்காக அண்மையில் ரஷ்ய விஞ்ஞானிகள் ஒன்று கூடினர், இக் கருத்தரங்கில் 600க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்,

பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி கருத்தரங்கு நடைபெற்றது. இன்றைய சூழ்நிலையில் பாடசாலை வாழ்வின் தேவைகளுக்கேற்ப குழந்தைகளின் திறனை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பதுதான் முக்கியமாக விவாதிக்கப்பட்டது,

இன்றைய குழந்தைகளுக்கிடையே பாரிய மாற்றங்கள் காணப்படுகின்றன, இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் குழந்தைகளின் உருவங்களிலும, உடல் அளவிலும, குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படுகின்றன,

குழந்தைகளின் உடல் வளர்ச்சியை கொண்டு அவர்கள் ஆரோக்கியமாக விருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியடைய முடியாது,

1959 – 69க்கு இடைப்பட்ட காலத்தில் போலியோமைலெடிஸ் நோய் 93 மடங்கும குத்திருமல் 16 மடங்கிற்கு மேலும குறைந்த விட்டது, குழந்தைகளிடையே காச நோயும், மலேரியாவும, அறவே கிடையாது, இது பெரும்பாலும வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்பட்டு வருகின்றது,

குழந்தைப்பருவம மாறி வரும சூழ்நிலையில் அவர்கள் மீது பல பொறுப்புகள் சுமத்தப்படுகின்றது, அவர்கள் எவ்வளவோ கற்க வேண்டியுள்ளது,

வீடுகளில் ரேடியோ, தொலைக்காட்சி, பத்திரிகைகள், பெற்றோர் சமூக ஸ்தாபனங்கள், இவைகள் குழந்தைகளின் வளர்ப்பில் பெருமபான்மையான பங்குகளை வகுக்கின்றன,

இவையனைத்தும குழந்தைகளின் உடல், உள ஆரோக்கியத்தை பாதிக்கின்றன. இமமாற்றங்கள் உடனடியாக தோன்றுவதில்லை, இவைகள் மெல்ல, மெல்ல கோரமாகி வருகிறது. உயர் நிலைப்பள்ளியை முடித்துக் கொண்டு பத்தாவது படிவத்தில் இப்பாதிப்பு உச்ச நிலையை அடைகின்றது,

இந்நிலைமைகளுக்கு காரணங்கள் உள்ளன,

அண்மைக்காலத்தில் பலவிதமான விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன, நவீன அறிவு மாணவர்களுக்கு புகட்டப்படுகிறது. இவ்விதமான பெரும பொறுப்புகளை குழந்தை உள்ளம சுமக்க வேண்டியுள்ளது. இவ்விதமான விஞ்ஞான அறிவை அவர்கள் மேம்படுத்திக் கொள்ளும திறனையும, அவர்கள் பெருமாறு செய்தல் வேண்டும,

மாணவர்களின் மீது "அதிகச்சுமை" என்பது பற்றி நாம பேசும அதே நேரத்தில் அவர்களுக்கு மிகக் குறைவான சுமையை அளிப்பதிலும அபாயம உண்டு, இந்த ஆபத்து நிலையைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது,

குழந்தைகளின் மூளைத்திறனுக்கு தேவையான விஷயங்களை போதிக்க வேண்டும, குறைவான சுமையை கொடுக்கும பொழுது, அவர்களது உள்ள வளர்ச்சி மந்தப்படுகின்றது.

அதிக சுமை என்பது பாடத்திட்டத்தை எளிமைபடுத்துவதில்லை, பாடத் திட்டங்களை எளிமைப்படுத்துவதை விட்டு அதனை பன்முகத் தன்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டும,

குழந்தைகள் சோர்வுறுதல் குறித்து பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன, பொதுவாக குழந்தைகளின் உளவியல் தன்மையைப் பொறுத்தே சோர்வு உண்டாகின்றது.

காலத்திற்கு காலம, போதனாமுறைகள் மாற்றப்பட வேண்டும, குழந்தைகளின் பிஞ்சு மனதில் களிப்புடன் விஷயங்களை திணிக்க வேண்டும,

முதல் வகுப்பு குழந்தைகள் படிப்பதை கடினமாக கருதுகின்றனர், இதனால் இவர்களின் மனவளர்ச்சி குன்றியிருப்பது, என்று அர்த்தமில்லை, இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு போதிப்பதற்கென விசேஷமுறை ஒன்றை வகுக்க வேண்டும,

ஆசிரியர்களும், வைத்தியர்களும ஒன்றிணைந்து குழந்தைகளின் நலனிற்காக செயல்பட வேண்டும, என்று வலியுறுத்தப்படுகிறது,

(ம-032)

வருமானால் எமக்கும தசைத் திரட்சி வரும என்பதையும செயலில் அவர்கள் காட்டி விட்டார்கள்—

எமக்கு மட்டுமதான் வரும என்று மார்தட்டி வந்த ஆண்களின் எல்லா துறைகளிலும பெண்கள் புகுந்து புறப்பட்டு விட்டார்கள்—


இப்படியிருக்க இலங்கைப் பெண்கள் மட்டும கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப்பார்களா என்ன? படத்தில் காணப்படும லீலாவதி ஆண்களுக்கு மட்டுமதான் மரம ஏற வரும என்ற நீண்டகால நம்பிக்கையைத் தவிடுபொடியாக்கியுள்ளார்—

ஆமாம்— 26 வயதேயான இந்தப் பெண்ணின் தொழிலே தென்னை மரங்களில் ஏறி தேங்காய் பறிப்பதுதான்! கடந்த பத்தாண்டுகளாகவே மரமேறி தேங்காய் பறித்து வாழ்க்கை நடத்தி வருகிறார் இத்துணிச்சல் மிக்க பெண்—

இவர் பாவாடை சாரி எல்லாம அணிவதில்லை— எப்போதும சாரம — சேஷ்ட் — டீஷர்ட் என்று காட்சியளிக்கும லீலாவதி யாரும கூப்பிட்டதும சாரத்தை வரிந்து கட்டிக் கொண்டு மரத்தில் தாவியேறி விடுகிறார் தேங்காய்களைப் பறித்துப் போட!

லீலாவதி எல்லா பெண்களை போல எலிவால் சடையைப் பின்னிப் போட்டுக் கொண்டு பாடசாலை சென்றவர்தான்— ஆனால் அவருக்கு படிப்பில் நாட்டம செல்லவில்லை—

வானமே எல்லையாக — சுதந்திரப் பறவையாக திரிய வேண்டும என்ற ஆவல் உந்தித் தள்ளியது— இதனால் தனது நீண்ட கேசத்தையும கட்டையாக ஆண்களைப் போலவே வெட்டி விட்டுக் கொண்ட அவருக்கு சமைப்பது — பின்னுவது — துவைப்பது போன்ற வேலைகளில் கொஞ்சமும் நாட்டம செல்லவில்லை—



தென்னை மரத்தில் ஏறுவது லீலாவதிக்கு கஷ்டமான ஆண்களைப் போல மரம ஏற வேலை அல்ல—

(ம)

MOTHER & CHILD

# தாயும் சேயும்

## சுத்தமாக வீட்டை பேணுவது அவசியம்

### அமைதியான வாழ்வு அதனால் நிச்சயம்

நாம் மட்டும அழகாக இருந்து விட்டால் போதுமா? நாம வாழும இல்லத்தையும அழகாக வைத்துக் கொள்ள வேண்டியது எம தலையாய கடமை—

அப்போததான் எம இல்லமும கவர்ச்சியாக தோன்றும— அதில் வாழும நாமும கவர்ச்சியாக தோன்றுவோம—

அவற்றை சுத்தமாகவும வைக்க வேண்டும— இடைக்கிடை தூசிதட்டி துடைத்தல் அவசியம—

வீட்டிலுள்ள பொருட்களை அவதானமாக பேணுதல் வேண்டும அப்போததான் அவற்றை எந்நேரமும நன்னிலையில் வைத்திருக்க முடியும—

— நா. சார்ந்திவதி —

இதுமட்டுமன்றி அது எமக்கு மகிழ்ச்சியையும அமைதியையும அளிக்கும இதற்கு நாம கீழ்க் காணும வழிமுறைகளை கைக் கொள்ளல் வேண்டும—

...வீட்டின் ஒவ்வொரு அறையையும சுத்தமாக வைத்திருக்க வேண்டும— அத்தோடு அவ்வறையிலிருக்கும தளவாடங்களையும ஏனைய பொருட்களையும நேர்த்தியாக வைக்க வேண்டும—

இது வீண் செலவை குறைப்பதோடு வீட்டையும அழகாக வைத்திருக்க உதவும—

கதிரைகள், மேசைகள், யன்னல்கள் போன்றவற்றிற்கு தேவையாயின் அலங்காரத் துணிகளை போடலாம— இதன் மூலம மேலும அழகு கூடும—

இதற்கு மேலும மெருகூட்ட பொருத்தமான நிறத்தினால் வீட்டு சுவர்களுக்கு பெயின்ட் பண்ண வேண்டும—

உதாரணமாக வெளிர் நீல நிற பெயின்ட் கண்ணுக்கு குளிர்மையையும மனதிற்கு அமைதியையும தரும— சுவர்களில் இயற்கையழகு மிளிரும அழகிய படங்களை தொங்க விடலாம— இது வீட்டின் அழகை மேலும கூட்டும—

மேற்கூறிய வழிமுறைகளை சிறந்தமான முறையில் நாம கையாளின் எம இல்லம கவர்ச்சியாக காணப்படுவதோடு மட்டுமன்றி குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும ஒருவரோடு ஒருவர் சேர்ந்து மகிழ்ச்சியாயிருக்க நண்பர்கள், மற்றும உறவினர்களை வரவேற்று உபசரிக்க குடும்பத்திலுள்ளவர்கள் தங்கள் நாளாந்த வேலைகளை சந்தோஷமாக செய்ய ஏற்ற மகிழ்ச்சியான சூழலுக்கு வெளிவட்டாரத்தில் குடும்பம மதிப்பு பெற வழி வகுக்கும என்பதில் ஐயமில்லை—

## சமையற்கலை

### அரிசி இல்லாத இட்லி

தேவையான பொருட்கள்

உளுத்தம பருப்பு— 200 கிராம

பயத்தம பருப்பு— 200 கிராம

ஊற வைத்த கடலைப் பருப்பு— ஒரு கையளவு

உப்பு— தேவையான அளவு

மிளகுத் தூள்— சிறிதளவு

முந்திரிப் பருப்பு— பத்து

செய்முறை:

உளுத்தம பருப்பு, பயத்தம பருப்பு ஆகியவற்றை சிறிதளவு தண்ணீரில் தனியாக இரண்டு மூன்று மணி நேரம ஊற வைக்கவும. பிறகு தண்ணீரை நீக்கி கல்லுரலில் போட்டு அரைக்க வேண்டும. நைசாக இல்லாமல் முக்கால் பதத்திற்கு அரைத்தவுடன் தனியாக எடுத்து விடுங்கள்.

பிறகு முந்திரிப் பருப்பு, உப்பு, ஊறவைத்த கடலைப் பருப்பு, மிளகுத் தூள் ஆகியவற்றை இந்த மாவில் போட்டு நன்றாகக் கலந்து விடுங்கள். இதுதான் ரைஸ்லெஸ் இட்லியின் மாவு. இட்லித் தட்டில் ஊற்றி குக்கரிலோ, இட்லி பானையிலோ வேக வைத்து எடுத்துவிட வேண்டும. இந்த இட்லியில் அரிசி கலக்காததால் நீரிழிவுக்காரர்கள் பயமில்லாமல் சாப்பிடலாம.

(ம—10)

## பெண் குழந்தை மீது தணியாத தாகம்



திருமணமான புதுமணத்தமபதியினருக்கு முதல் குழந்தை பிறக்கவிருக்கும சமயத்தில் கணவனுக்கும மனைவிக்கும உள்ளத்தில் ஏற்படும உணர்வுகள் சொல்லில் அடங்காதவை, பிறக்கவிருப்பது ஆண் குழந்தையா? அல்லது பெண் குழந்தையா? என்று இருவரும ஒருவருக்கொருவர் பந்தயம பிடிப்பதும பொருத்தமான பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதி வைப்பதும ஆண் மற்றும பெண் குழந்தைக்கான உடைகளை முன் கூட்டியே வாங்கி வைப்பதுமாக இளம தமபதியினர் பூரிப்புடன் தமது நாட்களைக் கடத்துவது வழக்கம,

ஆனால் முதல் குழந்தை ஆணாக இருந்து விட்டால் இரண்டாவது குழந்தை பெண்ணாக இருக்கக் கூடாதா என்று எண்ணத் தொடங்குவார்கள், இரண்டாம குழந்தையும ஆணாக

...களுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்ட போது ஆசைக்கொரு பெண் குழந்தையைப் பெற்று அவளை கண்ணின் மணியாகப் போற்றி வளர்க்க வேண்டும என்று தீர்மானித்தனர்,

ஆனால் முதலில் பிறந்தது என்னவோ ஆண் குழந்தைதான், இரண்டாவது பிறப்பது பெண்ணாக இருக்கும என்று நினைத்தனர், அதுவும ஆணாக அமைந்து விட்டது, மூன்றாவது? ஊஹூம இப்படியே சலிக்காமல் பதினோரு குழந்தைகளை — அவ்வளவும ஆண்கள், பெற்றுத் தள்ளியிருக்கிறார் ஐரின், இன்னும ஒரு தடவை முயற்சி செய்துதான் பார்ப்போமே என்று பன்னிரெண்டாவதற்கும அஸ்திவாரம போடப்போன போது டாக்டர் நடுவில் புகுந்து பதினொன்றுக்கு மேல் வேண்டவே வேண்டாம என்று தடுத்து விட்டார்

## மரத்தடியில் குழந்தை பெறும் நிலை இளம் தாய்க்கு ஏன் வந்தது?

மரத்தடியில் பிரசவம நடைபெற்றதாக பழங்கால கதைகளில் நாம கேட்டிருக்கிறோம இன்றைய நவீன காலத்தில் பறக்கும ஜெட் விமானங்களில் பிரசவம நடைபெற்றதாக வேண்டுமானால் அவ்வப்போது கேள்விப்பட்டுள்ளோம—

ஆனால் கடந்த வாரம ஒரு கர்ப்பிணிப் பெண் அரசாங்க ஆஸ்பத்திரியின் உதாசீனம...

நம்மால் இதற்கு மேல் ஆகாது என்றெண்ணியபடி ரமயா சாலையோரமாக இருந்த மரத்தடிக்குச் சென்று படுத்துக் கொண்டார்— இளம கர்ப்பிணியொருவர் பிரசவ வலி கண்டு துடிப்பதைக் கண்ட சிலர் பெண்களைக் கூட்டி வந்து பிரசவத்தை நடத்தியிருக்கிறார்கள்— சிறியலதா...

## இளம் வயதிலேயே

# இளம் வயதிலேயே ஏற்படும் மரணங்களை குறைக்க வழி என்ன?

பல மணித்தியாலங்களை விழுங்கும் பயிற்சிகள் தான் உடற்பயிற்சி என்று எண்ணிய காலம் மலையேறி விட்டது, உடற்பயிற்சியைத் தொழிலாகவும், மூலதனமாகவும் கொண்டவர்களைத் தவிர நாளாந்தம் தொழில் செய்யும் ஏனைய மக்களுக்கு சாதாரண உடற்பயிற்சி மட்டும் தாராளமாகப் போதும் என்பது இன்றைய நிலைப்பாடு, காரில் பயணம் செய்து மேசையில் அமர்ந்து வேலை பார்க்கும் நபர்கள் தினமும் கட்டாயம் கொஞ்சம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். தினமும் நாம் ஒரு மணித்தியாலமோ அல்லது அரை மணித்தியாலமோ வேகநடை பயின்று வந்தால் இருதய நோய்களையும் ஏன் புற்றுநோயையுமே விரட்டியடித்து விட முடியும் என்கிறார்கள் உடற்பயிற்சி ஆய்வாளர்கள்.

சாதாரண உடற்பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறவர்கள் குறைந்த வயதில் மரணம் அடைவதில்லையாம்! பெரும்பாலான ஆண் பெண்களுக்கு இந்த வேகநடை உடற்பயிற்சியே போதுமானது என்கிறார்கள் இவர்கள்!

அமெரிக்காவில் பத்தாயிரம் ஆண்களிடமும், மூவாயிரம் பெண்களிடமும் சாதாரண உடற்பயிற்சி தொடர்பாக எட்டு ஆண்டுகள் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது அவ்வளவு உடல் உறுதி இல்லாதவர்கள் தான் இள வயதிலேயே காலமானார்கள் என்ற உண்மை அப்போது தெரியவந்தது, ஆய்வில் சம்பந்தப்பட்ட அனைவருமே முறையான அதே சமயம் சாதாரண உடற்பயிற்சிகளை மேற்கொண்டு வந்திருந்தால் ஆண்களில் ஒன்பது சதவீதமானோரும், பெண்களில் பதினைந்து சதவீதமானோரும் இளவயதிலேயே உயிரிழந்திருப்பதைத் தடுத்து விட்டிருக்கக் கூடுமாம்.

உடற்பயிற்சிக்கும் விளையாட்டுத்துறை முன்னேற்றங்களுக்கும் பேர்போன அமெரிக்காவின் முப்பது சதவீதமான வயதுக்கு வந்தவர்கள் உறுதியான உடல் கொண்டவர்களாக இல்லையாம்! ஆச்சரியமாக இல்லை? பல்வேறு நவீன விஞ்ஞான வசதிகளின் துணையோடு இயந்திரமய வாழ்க்கையை அமைக்கக் கொள்ளும் போது உடல் தன் உறுதியை இழந்து விடுகிறது,

(ம–032)

ஆனால் கடந்த வாரம் ஒரு கர்ப்பிணிப் பெண் அரசாங்க ஆஸ்பத்திரியின் உதாசீனம் காரணமாக மரத்தடியில் பிள்ளை பெற்றுக் கொண்ட பரிதாப சம்பவம் மாத்தறையில் நிகழ்ந்தது–

இருபதே வயதான ரம்யா என்ற பெண் நிறைமாத கர்ப்பிணி நோனாகமை என்ற கிராமத்தைச் சேர்ந்த இவர் அலுவல் நிமித்தம் மாத்தறை நகருக்கு வந்திருக்கிறார்– அப்போது திடீரென பிரசவ வலி ஏற்பட்டிருக்கிறது ரமயாவுக்கு!

பிரசவ வலியால் இவர் அவதிப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட சில நல்மனது கொண்டவர்கள் தமது சொந்த செலவில் அரை மைல் தொலைவில் உள்ள மாத்தறை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு ரமயர்வை அழைத்துச் சென்றிருக்கின்றனர்–

ரமயாவைப் பரிசோதித்த டாக்டர் அவரை ஏழாம் வார்டில் தங்கும்படி சொல்லியிருக்கிறார்– ஆனால் வார்டுக்கு சென்ற ரமயாவை அங்கிருந்த ஊழியர் ஒருவர் பிரசவம் இப்போது நடக்காது வீட்டுக்குப் போய் பின்னர் வரலாம் என்று சொல்லித் திருப்பி அனுப்பி விட்டார்–

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போகச் சொன்னதும் அவர்கள் சொல்வதும் உண்மையாகத்தான் இருக்கும் போலிருக்கிறது என்ற எண்ணியபடி மீண்டும் தெருவுக்கு வந்த ரமயாவை இவ்வளவு நேரமாக பதுங்கியிருந்த பிரசவ வலி மீண்டும் உடலெல்லாம் பரவி அவரை உலுக்கியெடுக்கத் தொடங்கியது–

கூட்டி வந்த பிரசவத்தை நடத்தியிருக்கிறார்கள்– சிறியலதா என்ற பெண் தன் தாயாரைக் கூட்டி வந்து தொப்பூள் கொடியை வெட்டச் செய்திருக்கிறார்–

மரத்தடியில் பிரசவம் ஒன்று நடந்து கொண்டிருக்கும் விடயம் சீக்கிரமே மாத்தறை ஆஸ்பத்திரி பொலீஸ் நிலையத்தை எட்டியிருக்கிறது– அப்பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உடனடியாக விடயத்தை ஆஸ்பத்திரி டி எம் ஒவின் காதில் போட்டிருக்கிறார்–

தவறு ஒன்று நடந்து விட்டதை உணர்ந்து கொண்ட அவர் அவசர அவசரமாக அம்புலன்ஸை மரத்தடிக்கு அனுப்பினார்– ஆனால் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் குழந்தை உயிரிழந்தது– தாயார் ரம்யா ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்–

இச்சம்பவம் பத்திரிகை வாயிலாக மக்கள் கவனத்துக்கு எட்டியதும் சுகாதார அமைச்சும் விழித்துக் கொண்டது– இச்சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்தி தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தனது அமைச்சு செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்–

முடிந்த கதை முடிந்து விட்டது என்றாலும் இப்படியொரு அவலம் இனி யாருக்கும் எதிர்காலத்தில் நடக்காமலிருப்பதை உறுதி செய்வதாக அமைச்சரின் நடவடிக்கைகள் இருக்கட்டும்!

(த–032)

இருக்கக் கூடாதா என்று எண்ணத் தொடங்குவார்கள், இரண்டாம் குழந்தையும் ஆணாக இருந்து விட்டால் இன்னும் ஒருமுறை முயற்சி செய்து பார்த்து விடலாமே என்று அவர்களிடையே ஒரு ஆசை தோன்றும்,

பலரது குடும்பங்கள் பெரிதாகி விடுவதற்கு இந்த குருட்டு அதிஷ்டத்தை நம்பி பெற்றோர் தொடர்ந்து முயற்சி செய்வது ஒரு முக்கிய காரணம், வெறும் குருட்டு அதிஷ்டத்தை நம்பினால் மட்டும் நம் ஆசை நிறைவேறிவிடப் போவதில்லை, என்ற உண்மையை பெற்றோர் மெதுவாக உணர்ந்து கொள்ளும் போது காரியம் மிஞ்சிப் போய் த[illegible]லும் காலிலும் இடுப்பிலுமாக குழந்தைகள் பெருகி, குடும்பத்தை எப்படிக் கரை சேர்ப்பது என்ற கேள்விக்கு விடைகாண வேண்டிய நிலைக்கு பெற்றோர்கள் தள்ளப்பட்டிருப்பார்கள்!

ஆண்மகன் இருந்தாலாவது ஒருவேளை கஞ்சியாவது ஊற்றுவான் என்ற எதிர்பார்ப்புடன் தொடர்ந்து பிள்ளைகளைப் பெற்றுப் போடுவதும் அவை பெண்களாகவே பிறந்து போடுவதும் நம நாட்டில் சாதாரணமாக பெற்றோரின் ஆவலில் மண்ணை வாரிப் நாம காணக்கூடிய ஒரு விடயம்.

ஆனால் இங்கிலாந்திலும் ஆசைக்கொரு பெண் குழந்தை வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தொடர்ந்து படிக்கட்டு வரிசையாக பதினொரு ஆண் குழந்தைகளைப் பெற்றுப் போட்டு விட்டு இப்போது விழி பிதுங்கிக் கொண்டிருக்கிறார்கள் பெண் குழந்தை மீது தணியாத தாகம் கொண்ட பெற்றோரான லயனலும் ஜரினும,

இவ்விருவரும் இருபத்தியிரண்டு ஆண்டு பதினொன்றுக்கு மேல் வேண்டவே வேண்டாம் என்று தடுத்து விட்டார்,

தொடர்ந்து பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டதாலும் சுட்டிப் பையன்களைக் கட்டி வளர்ப்பதில் சக்தியை செலவிட்டு உடல் மாய்ந்து போனதாலும் இனி பிள்ளை பெற்றுக் கொள்ளக்கூடாது என்று டாக்டர்கள் ஆலோசனை வழங்கியதால் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் ஆசை இத்தனை வருட முயற்சிகளுக்குப் பின்னரும் நிராசையாகி விட்டது,

லயனலும் ஜரினும் வாழ்ந்து வரும் வீடு பதினொரு குழந்தைகளைக் கொள்ளக்கூடிய பெரிய வீடன்று; இதனால் எல்லா பையன்களும் மேசையில் அமர்ந்து உணவருந்த வழியில்லாமல் மடியில் தட்டை வைத்துக் கொண்டு சாப்பிடுகிறார்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை அவ்வளவு அழுக்குத் துணிகளையும் ஜரின் தாமே கழுவி வந்தாராம், இப்போது வாஷிங் மெஷின் இவ்வேலையைச் செய்து வந்தாலும் ஒன்றரை வருடங்களுக்கு மேல் இவ்வியந்திரம் தாக்குப் பிடிப்பதில்லையாம்.

கூச்சலும் குழப்பமும் மிகுந்த பெரிய குடும்பமொன்றைக் கட்டிக்காக்க வேண்டியிருப்பதால் பொழுது போக்கு என்ற பேச்சுக்கே இவ்வீட்டில் இடமில்லை, அதிகப்படியாக செலவழிப்பதில்லை, மதுவருந்துவதில்லை, வெளியே செல்வதுமில்லை, சம்பாதிப்பதையெல்லாம் உணவு சாப்பாடு மருந்து என்று செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள் ஜரினும் லயனலும்!

(ம –032)

## திருமண உடைகள் தயாரிப்பு

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பார்கள்.

ஆனால் திருமண ஆடைகள் ஆடை தயாரிப்பு கலைஞர்களால் தான் உருவாக்கப்படுகின்றன.

"இந்த ஆண்டின் தலைசிறந்த திருமண உடைகள் டிசைனர் யார்?" என்ற போட்டி ஒன்று சமீபத்தில் பிரிட்டனில் நடந்தது.

வெவ்வேறு டிசைனர்கள் உருவாக்கிய திருமண உடைகளை அணிந்தவாறு அழகிகள் பலர் அதற்கான அணிவகுப்பில் பங்கு பெறும் முன்பு, மாதிரி அணிவகுப்பை நடத்தி ஒத்திகை பார்த்தார்கள்.

திருமணங்களை கடவுள் நிச்சயிப்பது போல நல்ல டிசைனர்களை அணிவகுப்பு முடிவில் நடுவர்கள் நிச்சயிக்கிறார்கள்.

(ம–10)

சிந்தாமணி

தினபதி வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

சிந்தாமணி CHINTAMANI

# கடவுளுக்கு வந்த ஆபத்து!

தென் பசுபிக் சமுத்திர தீவொன்றில் வாழும் மக்கள் பிரிட்டிஷ் கோமகன் பிலிப் இளவரசரை தமது கடவுளாகவே கருதி வழிபட்டு வருகிறார்கள், இவரது படத்தை சட்டம் மாட்டி மேடையொன்றில் வைத்து கடவுளாக தமது இரட்சகராக இம்மக்கள் வணங்கி வருகின்றனர்.

அவ்வாறு வணங்கும் இம்மக்கள் பிலிப் இளவரசரை இதுவரை நேரில் கண்டதேயில்லை,

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு அப்பால் உள்ள இத்தீவில் வாழ்ந்து வரும் இம்மக்களுக்கு பிலிப் இளவரசரை வணங்கும் வழக்கம் எப்படி பழக்கத்துக்கு வந்தது என்பது இன்னும் சிதம்பர ரகசியமாகவே இருந்து வருகிறது,

யாரோ ஏற்படுத்திய இப்பழக்கத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் இம்மக்கள் தமது கடவுள் தம்மை நேரில் வந்து சந்தித்து அருள் பாலிக்க வேண்டும், என்பதில் இப்போது தீவிரம் காட்டி வருகிறார்கள்,

மகாராணியாரின் கணவர் என்பதால் இவருக்கு பல ஓயாத பணிகள் இருக்க வேண்டும், இதனால் தான் தம்மைக் காண இவருக்கு வசதி வாய்க்க மாட்டேன் என்கிறது என்பது இம்மக்களின் எண்ணம்,



பிலிப் கோமகன்

இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று எண்ணிய இவர்கள், பிலிப் இளவரசருக்கு எழுதிய கடிதமொன்றில் தமது யோசனையை வெளிப்படுத்தியிருந்தார்கள்,

தெய்வமே எம்மைக்காண இங்கே வாருங்கள்! உங்களுக்கு பதிலாக எமது இனத்தவர் ஒருவரை மகாராணியாருக்காக அனுப்பி வைக்கிறோம், அவர் மகாராணியாரைக் கவனமாகப் பார்த்துக் கொள்வார் — இப்படி இம்மக்கள் பிலிப் இளவரசருக்கு யோசனை தெரிவித்திருக்கிறார்கள்,

சமீபத்தில் தமது இதய தெய்வத்துக்கு இம்மக்கள் பரிசுப் பொருட்களையும் அனுப்பி வைத்துள்ளனர், இம்மக்கள் யுத்தத்துக்கு பயன்படுத்தும் குண்டாந்தடி ஒன்றையும் இப்பழங்குடி ஆண்கள் இடையில் அணியும் இழை ஒரு உடையான காய்ந்த புற்களைக் கொண்ட கோவணத்தையும் பிலிப் இளவரசருக்கு அனுப்பியிருந்தனர்,

இத்தனை வருடங்களாகக் காத்திருந்தும் தமது தெய்வத்தை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டாத இவர்களில் சிலருக்கு சலிப்பு ஏற்பட்டு விட்டதாம்,

இந்தத் தெய்வத்தை தலை முழுகிவிட்டு வேறு ஒரு கடவுளை நாடுவோமா என்றும் யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் இவர்கள், இம்மக்கள் வணங்கிவரும் கோமகனின் புகைப்படமும் பொலிவிழந்து மங்கி வருகிறது, புதிய படமொன்றையாவது கோமகன் அனுப்பி வைக்கக் கூடாதா?

(த-032)

## இளவரசர் விருப்பம் மறுப்பு

அமெரிக்காவில் பூங்காவொன்றில் நடைபெற்ற வைபவமொன்றில் இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொண்டபோது அவரை முத்தமிட ஒரு அமெரிக்கப் பெண் முயன்றார், அவரது முயற்சியும் கைகூடியது—

இளவரசர் இந்த வைபவத்தில் கலந்து கொண்ட போது அன்டர் லட்லா என்ற 42 வயதான பெண்மணி ஒரு சிவப்பு ரோஜாவையும் பிரிட்டிஷ் தேசியக் கொடியையும் ஏந்திய படி கட்டுக் காவலை முறியடித்துக் கொண்டு இளவரசரை நோக்கி முன்னேறினார்.

தன்னை முத்தமிடத்தான் முயல்கிறார் என்பதை அறிந்து கொண்ட இளவரசர் ஒரு கணம் தயங்கினாலும் தனக்கே உரிய ராஜ கம்பீரத்துடன் தன்னை சமாளித்துக் கொண்டு சிரம் சாய்த்து தன் கன்னத்தைத் தந்தார் அப் பெண்மணியிடம்,

அப் பெண்ணும் முகமெல்லாம் புன்னகையாக இளவரசரின் கன்னத்தில் "இச்" பதித்தபோது கையோடு கொண்டு வந்திருந்த ரோஜாப் பூவையும் இளவரசரிடம் தர முயன்றார், ஆனால் மென்மையான புன்முறுவலோடு நாகரீகமாக ரோஜாவை ஏற்க மறுத்து விட்டார் இளவரசர்!

(ம-032)

## ஜேம்ஸ்பாண்ட் பட்டபாடு

ஜேம்ஸ் பாண்ட், பாத்திர அமைப்பின்படி பிரிட்டிஷ் உளவு சேவை அவருக்கு எதிரிகளைத் தீர்த்துக்கட்ட லைசன்ஸ் வழங்கியிருக்கிறது, ஜேம்ஸ் பாண்ட் யாரையாவது தீர்த்துக் கட்டினால் கேள்விமுறையில்லை,

ஆனால் இப்பேர்ப்பட்ட கதாபாத்திரத்தை பல்வேறு திறமையாக ஏற்று நடித்து உலகப் புகழ் பெற்ற ஸோன் கொனறி சமயத்தில் மலைப் பாதையூடாக படுவேகத்தில் காரைச் செலுத்திச் சென்று பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டார்,


பொலிஸார் மேலும் கொஞ்சம் விசாரித்ததில் காரைச் செலுத்துவதற்கான லைசன்ஸ்சே இவரிடம் இல்லை என்ற உண்மை தெரியவந்தது— 190 டாலரை அபராதமாக செலுத்தினார் ஸோன் கொனறி! (ம-032)

# நெல்சன் மண்டேலாவின் முதலாவது எதிரி யார்?

பேசலாமா? 27 ஆண்டுகளின் பின்னர் விடுதலையாகி வெளியே வந்திருக்கும் இவரை "இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை" என்று சொல்வதெல்லாம் சுத்த பேத்தல்,

தன் மனைவிக்குத் துரோகம்

# வைதீக ரீதியில் ரஷ்ய சமரஸம்



திருச் சபைகளுக்கு மத்தியில் வைதீக ரீதியில் ரஷ்யா சமரஸம் செய்து வைத்திருக்கிறது, அண்மையில் றோமன் கத்தோலிக்க திருச் சபைக்கும், ரஷ்ய வைதீக திருச் சபைக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது, இச்சந்திப்பின் போது பல தப்பபிப்பிராயங்கள் அகற்றப்பட்டன என்று இரு தரப்பினரும் அறிவித்தனர்.

கிரேக்க கத்தோலிக்க (யூனியேட்) திருச்சபை 1596ஆம் ஆண்டில் உக்ரேயனில் ஸ்தாபிக்கப்பட்டது, வத்திக்கான் கண்காணிப்பின் கீழ் இருந்த போதிலும் வைதீகச் திருச்சபையின் ஆசாரங்களை அது பின்பற்றியது,

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது யூனியேட் திருச் சபையைச் சேர்ந்தவர்கள் நாஸி ஜெர்மனியுடன் ஒத்துழைத்த குற்றச் சாட்டின் கீழ் இரண்டாயிரம் சாதாரண குருமார்கள் தண்டிக்கப்பட்டனர்— 1946 ஆம் ஆண்டு இத் திருச் சபை தானாகவே தன்னைக் கலைத்துவிட்டு அதன் சொத்துக்கள் அனைத்தையும் ரஷ்ய வைதீக சபைக்குக் கையளித்தது. இருந்த போதிலும் அவர்கள் தொடர்ந்து செயல்பட்டனர், மத ஆசாரங்களை ரகசியமாகக் கடைப் பிடித்தனர்,

உக்ரேயினில் கிரேக்க கத்தோலிக்க திருச்சபை சட்டரீதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது, அதிமேற்றிராணியார் விளாதிமிர் ஸ்டெனியுஸ்க் ஆராதனை நடத்தும் காட்சி இது, (ம-சி)

## மரம் ஏறி...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லும் போது திடீரென ஊற்றொன்று நிலத்தில் இருந்து பீச்சியடிக்கும் போது ஆனந்தமானந்தமாக இருக்குமாம் இவருக்கு! இதனால் கிணறு வெட்டுவதை மிக விரும்புகிறார் லீலாவதி—

லீலாவதி எத்தல்கோட்டையில் வசித்து வருகிறார்— தாய் தந்தையர் தவிர கடைக்குட்டி தம்பியையும் இவர்தான் கவனித்து வருகிறார்— தினமொன்றுக்கு பத்துத் தென்னை மரங்க

விருப்பத்தோடு சுலபமாக செய்து முடிக்கிறார்—

ஆண்கள் மாதிரி உடையணிந்து ஆண்களின் வேலைகளை விருப்பத்துடன் செய்து வரும் லீலாவதிக்கு ஆணாக பிறக்கவில்லையே என்ற ஏக்கம் மட்டும் இல்லை— பெண்ணாக இருப்பதில் சந்தோஷம் என்று சொல்லும் இவர் பெண்களுக்கு ஆண்களின் வேலைகளை அவர்களை விட சுத்தமாக செய்யவரும் என்பதை செயல் ரீதியாக தன்னால் செய்து காட்ட முடிகிறதே என்ப

## சின்ன வீடு ஆபத்தானது!

பிலிப்பைன்ஸ் நாட்டு செனட்டர் ஒருவர் கள்ள மனைவி வைத்திருப்பவர்களுக்கு குறைந்த பட்சம் ஆறு ஆண்டு சிறைத் தண்டனை வழங்க சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என யோசனை தெரிவித்துள்ளார்,

இதற்கு வகை செய்யும் பொருட்டு பிலிப்பைன்ஸ் நாட்டு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று கூறுகிறார் இவர்,

கணவர்மாருக்கு துரோகம்

# முதலாவது எதிரி யார்?

நெல்சன் மண்டேலாவை உலகம தேவைக்கு அதிகமாகப் புகழ்ந்து தள்ளுகிறது, அவர் அத்தனை பெரிய மனிதர் அல்லர், சாதாரண மனிதர் தான்—

— இவ்வாறு உலகம போற்றும விடுதலை வீரனைக் காரசாரமாக தாக்கியிருப்பது இன ஒதுக்கல் கொள்கையில் ஊறிப்போன தென் ஆபிரிக்க வெள்ளையர்கள் தான் என்று நீங்கள் நினைத்தால் அது தப்புக் கணக்காகவே இருக்க முடியும், ஏனெனில் இப்படி ஒரு கருத்தை வெளியிட்டிருப்பவர் நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி பெவ்லின் தான்.

ஒவ்வொன்றுக்கும அடுத்த பக்கம் என்று ஒன்று இருக்கிறது அல்லவா? இந்தா மண்டேலாவின் அடுத்த பக்கத்தைப் பற்றி சொல்கிறார் பெவ்லின் மண்டேலா அவரை 1957 ஆம ஆண்டு விவாகரத்து செய்தார்,

உலகம புகழும இந்த மனிதர் ஒரு தடவை தன் முதல் மனைவியை கைவிட்டுச் சென்றதோடு அவரை அவமானப்படுத்தவும செய்தார், நெல்சன் மண்டேலா குடுமபத்தைக் கவனிப்பதை விட ஆபிரிக்க் தேசிய காங்கிரஸ் பணிகளிலேயே சதா கவனம செலுத்தி வநதார்,

இரவு வெகு நேரம கழித்தே வீடு வருவார், அல்லது வீட்டுக்கே வருவதில்லை, ஏன் ஒழுங்காக வீடு வருவதில்லை என அவரைத் தட்டிக் கேட்ட போது, பொலீஸ்காரர்கள் கூட இப்படி கண்டிப்பான கேள்விகளைக் கேட்பதில்லையே என்ற எரிச்சலூட்டும பதில் தான் கிடைத்து வந்தது

இப்படிப்பட்ட ஒரு மனிதரை யேசு கிறிஸ்துவோடு ஒப்பிட்டுப் ...

வருகை" என்று சொல்வதெல்லாம சுத்த பேத்தல்,

தன் மனைவிக்குத் துரோகம செய்த ஒரு மனிதரை தன் மனைவியையும் நான்கு பிள்ளைகளையும கைவிட்டுச் சென்ற ஒருவரை கிறிஸ்து நாதருடன் ஒப்பிடுவது அபவாதம ஆகாதா? இவர் வெறும சாதாரண மனிதர் மட்டும்ம, அவரை உலகம அளவுக்கு அதிகமாகவே புகழ்கிறது—

— இவ்வாறு நெல்சனை விளாசித் தள்ளியிருக்கிறார் 68 வயதான பெவ்லின், கிறிஸ்து நாதரோடு மண்டேலாவை ஒப்பிடுவதைத் தாங்காமல் கொதித்துப் போயிருக்கிறார் இந்த விவிலிய போதகர்! (ம-032)

... தமபியையும இவர்தான் கவனித்து வருகிறார்— தினமொன்றுக்கு பத்துத் தென்னை மரங்களாவது கிடைக்குமாம—

தினத்துக்கு 15 மரங்கள் ஏற தன்னால் முடியும என்று பெருமையுடன் சொல்லும லீலாவதி மரத்துக்கு 10 ரூபா கட்டணம கேட்கிறார் இதைத் தவிர கிராமத்து கடைகளுக்கு பால் சப்ளை செய்பவரும இவர்தான்—

பசு வைத்திருப்பவர்களிடம பாலை வாங்கி சைக்கிள் மூலம கடைக்காரர்களுக்கு விநியோகித்து வரும லீலாவதி கடைகளுக்கு தொகையாக பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து சேர்க்கும சிரமமான பணியையும ...

... களின் வேலைகளை அவர்களை விட சுத்தமாக செய்யவரும் என்பதை செயல் ரீதியாக தன்னால் செய்து காட்ட முடிகிறதே என்பதில் பூரிப்பு அடைவதாகச் சொல்கிறார்—

(த-032)

... பிலிப்பைன்ஸ் நாட்டு சட்டத்தில் திருத்தம கொண்டு வரப்பட வேண்டும என்று கூறுகிறார் இவர்,

கணவர்மாருக்கு துரோகம செய்யும மனைவிமார்களையும சின்னவீடு வைக்குமகணவர்மாரையும் சுமமா விட்டு வைக்கக் கூடாதாம! (ம-032)

# இரு கவர்ச்சி ராணிகள் ஒன்றாக இணைந்தனர்



ஜாக்குலின்

ஜாக்குலின் ஒனாசிஸ் இப்போது நியூயோர்க் நகரில் இயங்கி வரும புத்தக வெளியீட்டு நிறுவனமொன்றில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி பெரிய புள்ளிகளை வதைத்துப் போட்டு அவர்களது அல்லது அவர்களைப் பற்றிய புத்தகங்களை வெளியிட்டு தமது நிறுவனத்துக்கு வருமானம் தேடிக் கொடுத்து வருகிறார் ஜெக்கி,

இவர் சமீபத்தில் தமவசப் படுத்திய பெரும புள்ளி யார் தெரியுமா? முன்னாள் பிரெஞ்சு காம தேவதையான பிரிஜட் பார்டோ தான்,

இப்போது சினிமா உலகை விட்டு ஒதுங்கி ஒரு அழகிய பிரெஞ்சு கடற்கரைக் கிராமமொன்றில் தனிமையில் வாழ்ந்து வரும பார்டோ தன் சுய சரிதையை எழுதி முடித்திருக்கிறார்,

தன் காதலர்கள், கணவர்கள் பற்றியும பல்வேறு வாழ்க்கை ரகசியங்களையும இப்புத்தகத்தில் பிட்டுபிட்டு வைத்திருக்கிறாராம இவர், இப்புத்தகத்தை முதலில் வெளியிடும உரிமையைத் தான் ஜெக்கி நைசாக பேசி பார்டோவிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்,

பார்டோ ஒரு பிரெஞ்சு நடிகையல்லவா? இந்தப் பிரெஞ்சுக்காரர்களிடம ஒரு பழக்கம் உண்டு. தமது மொழி, கலாசாரத்தை லேசில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள், இவர்கள் ஆங்கிலம கற்பதில்லை, பிரெஞ்சு நாட்டில் ஆங்கிலத்தின் செல்வாக்கு செல்லுபடியாவதில்லை,

பிரெஞ்சுக்காரரான பார்டோ தான் எழுதிய புத்தகத்தை பிரெஞ்சு மொழியில் வெளியிடாது ஆங்கிலத்தில் அதனை நியூயோர்க்கில் வெளியிடுவது இம மக்களுக்கு கொஞ்சமும பிடிக்கவில்லை.

முதலில் தாய் மொழியில் வெளியிட்டு விட்டு அல்லவா ஏனைய மொழிகளுக்கு உரிமையைக் கொடுத்திருக்க வேண்டும என பொருமுகிறார்கள்—

ஆனால் பார்டோ என்ன சொல்லுகிறார் தெரியுமா?

பிரெஞ்சு மொழியில் வெளியிட வேண்டும என்பது தான் எனது ஆசையும கூட, ஆனால் எனது புத்தகத்துக்கு குறைந்த பணம அல்லவா கொடுக்க முன் வருகிறார்கள், இந்த பிரெஞ்சு வெளியீட்டாளர்கள்? நியூயோர்க்கில் இருந்து வந்து என்னுடன் பேசிய ஜெக்கி, இருபது லட்சம பவுண்களைத் தருவதற்கு முன்வந்தாரே!



பிரிஜட் பார்டே

தன்னை விமர்சிப்பவர்களுக்கு பார்டோ இப்படி பதில் கூறுகிறார், பணத்துக்கு முன்னால் மொழியாவது, கலாசாரமாவது, (த-032)


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்,



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி- 23981—84.



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 4 மார்ச் 1990

"CHINTAMANI", 5, Gunasena Mawatha, Colombo 12 — P.O. Box 1613